Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 084 | வியாழக்கிழமை | மாசி 05 ஆம் நாள் 18 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## வெற்றிலை துப்பியவர் வீதியில் வீழ்ந்து சாவு

யாழ்ப்பாணம், பெப். 18
வெற்றிலை துப்பும்போது வீதியில் வீழ்ந்த பெண் சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி ஞானேஸ்வரி என்ற 19

## யாழ். பல்கலைப் பட்டமளிப்பு

# விரைவில் முடிவு

சுகாதாரப் பணிப்பாளர்



# கொத்தணிக்கு வாய்ப்பு

மாவட்டச் செயலர்



யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா தொடர்பில் சுகாதார அமைச்சு விரைவில் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன். அதே வேளை, பட்டமளிப்பு விழாவுக்கு வெளிமாகா ணங்களைச் சேர்ந்தோர் பெருமளவில் கலந்து கொண் டால் கொரோனாக் கொத்தணி ஏற்பட வாய்ப்பிருப்பதாக யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். 19

## திட்டமிட்ட தினத்தில் பட்டமளிப்பு நடக்கும்

### துணைவேந்தர் உறுதி



யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் 19



## தற்கொலை அங்கிகள் செட்டிகுளத்தில் மீட்பு!

கிளிநொச்சி, பெப். 18
செட்டிகுளம், சின்னத்தம்பனை பகுதியில் இரண்டு தற்கொலை அங்கிகள் நேற்றுப் பொலி 19

# சர்வதேச விசாரணையை இலங்கை அனுமதிக்காது

## ராஜபக்ச அரசாங்கம் திட்டவட்டம்



கொழும்பு, பெப்ரவரி 18
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேசப் பொறிமுறையை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்று வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 19

## கிணற்றில் வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
வலிப்பு ஏற்பட்டு தவறுதலாகக் கிணற்றுக்குள் வீழ்ந்தவர் சடலமாக மீட்கப் 19

## கடற்படையினருக்கு காரைநகரில் நிலஅளவீடு எதிர்ப்பையடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 18
காரைநகர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 8 பரப்பு தனியார் காணியை கடற்படையின் தேவைக்காக அபகரிக்கும் முயற்சி பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது. 19

## பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக ரணில், சஜித் இணைவு!

கொழும்பு, பெப். 18
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் 'பழிவாங்கல்' நடவடிக்கைகளிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் முன்னைய அரசின் உறுப்பினர்களையும் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் 19



## அரசின் வதைகளால்தான் சிறுபான்மையினர் ஐக்கியம்

### சுவிஸ் தூதுவரிடம் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளால்தான் சிறுபான்மை மக்களுக்குள் தற்போது ஐக்கியம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று தெரி 18

## தந்தையை கொன்றோரை நான் மன்னித்துவிட்டேன்

### ராகுல் காந்தி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18
தந்தையைக் கொன்றோரை மன்னித்துவிட்டேன் என்று தெரிவித்துள்ளார் ராகுல் காந்தி. புதுச்சேரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே 19

## இலங்கைக் கட்சியொன்றை விலைக்குவாங்கும் பா.ஜ.க.?

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சந்தேகம்

கொழும்பு, பெப். 18
இலங்கையில் பாரதிய ஜனாதா கட்சி ஆட்சி அமைக்கும் திட்டம் தவறுதலாகக் கூறப்பட்ட விடயமொன்றல்ல. அவர்கள் இலங்கையில் உள்ள பிரதான கட்சியொன்றைக் கொள் 19

## யாழ்.பல்கலை மாணவன் உட்பட மேலும் நால்வருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், பெப். 18
வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவை 18

# மின்சார உற்பத்திக்கான அனுமதி முற்றிலும் வணிக நடவடிக்கையே!

## இந்தியாவின் கருத்துக்கு சீனா பதில்

**கொழும்பு, பெப். 18**

**வடக்கில் உள்ள தீவுகளில் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமை முற்றிலும் ஒரு வணிக நடவடிக்கை என சீனா அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக இந்தியாவின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள சீனா, சர்வதேச ஏல நடைமுறைகளுக்கு அமையவே நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டியுள்ளது.**

மேலும், எந்தவொரு நாடாக இருந்தாலும், நிறுவனங்களின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சீனா தெரிவித்துள்ளது.

இலங்கைப் பிராந்தியத்தில் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரை, இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மாத்திரமே, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் நாட்டின் தொடர்ச்சியான அபிவிருத்தி ஆகியனவற்றை உறுதி செய்ய முடியும் என்றும் சீனா மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வட பகுதியில் உள்ள 3 தீவுகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

## யாழ். கலாசார மண்டப பராமரிப்புக்கு 'அடோக்' அடிப்படையில் பணியாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்துக்குத் தேவையான துறைசார் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தை பராமரிக்க 67 வரையான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். அதில் துறைசார் பொறியியலாளர், இயக்குநர்கள், மின் பொறியியலாளர், மற்றும் பல்துறை சார் அலுவலர்கள் 12 பேரும் உள்ளடங்குகின்றனர்.

இந்த அலுவலர்களின் தேவை குறித்து உடனடியாக பத்திரிகையில் விளம்பரப்படுத்தி அவர்கள் நியமிக்கப்படுவர். அதேநேரம், தொழிலாளர் தரத்திலானோருக்கு சபையில் ஏற்கனவே உள்ள பணியாளர்களைத் தெரிவுசெய்து இந்தியப் பணியாளர்களிடம் பயிற்சிக்கு அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேநேரம், யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசினால் 100 கோடி இந்திய ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (த-319)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், பெப். 18

தென்மராட்சி கோட்டமட்ட கூட்டுறவுச் சங்க கணக்கு பகுதி பணியாளர்கள் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்காக 'வறுமையில் திறமை நிதியம்' கல்வி நிதி வழங்கும் அங்கத்தவர்கள் நலத் திட்ட நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணிமனையில் தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கூட்டுறவு பரிணமிப்பு சிந்தனையின் கீழ் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் அனுசரணையுடன் இவை நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சியாமளா சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-159)

## சந்தேக நபருக்கு விளக்க மறியல் நீடிப்பு

மன்னார், பெப். 18

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்களுக்கான பதில் நிர்வாக அலுவலராகவும் இலுப்பைக்கடவை கிராம அலுவலராகவும் கடமையாற்றிய எஸ்.விஜியேந்திரனின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றில் முன்னிலையாகி, மேலதிக அறிக்கை தாக்கல் செய்தனர்.

விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், குறித்த சந்தேகநபர் தொடர்பான மருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினர். தவிர, தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்ட இரும்பு கம்பியில் காணப்பட்ட குருதி மாதிரி இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டிருந்தது. குறித்த பகுப்பாய்வு அறிக்கையும் மன்றுக்குக் கிடைக்கவில்லை. எனவே ஞாபகக் கடிதம் ஒன்றை பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்ப மன்றிடம் கோரிக்கை முன்வைத்தனர். வழக்கு 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த அலுவலர், கடந்த நவம்பர் 3ஆம் திகதி இரவு தனது கடமையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். (த-56)

## திருமண நாளை முன்னிட்டு ஆலயத்துக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 18



மாவை சித்திவிநாயகர் முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு இராசரத்தினம் செல்வநாயகி தம்பதிகளால் 50 ஆயிரம் ரூபா பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தம்பதிகளின் திருமண பொன்விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டே இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தம்பதியர் குறித்த ஆலய முன்றலுக்கும் காங்கேசன்துறை பிரதான வீதிக்கும் இடையேயான இணைப்புக்குத் தடையாக இருந்த தமது காணியை நன்கொடையாக வழங்கி பொதுமக்கள் வழிபாடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கு உதவியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கையில் பா.ஜ.க. வை பதிவு செய்ய சட்டத்தில் இடமேயில்லை

கொழும்பு, பெப். 18

இலங்கையில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க இந்தியாவால் முடியாது என்று தேர்தல்கள் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சி இலங்கையில் ஒரு கட்சியை நிறுவ திட்டமிட்டுள்ளது என்று அண்மையில் செய்திகள் வெளியாகின.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அந்த நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுல கஜநாயக்க, நாடாளுமன்ற தேர்தல் சட்டம் மற்றும் அரசமைப்பின் பிரகாரம் அவ்வாறு செய்ய எந்த சட்ட கட்டமைப்பும் இல்லை என குறிப்பிட்டார்.

இருப்பினும் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் இத்தாலி, பிரிட்டன் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட வெளிநாடுகளில் கட்சிக்கான அலுவலகங்களை நிறுவியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் மத்தியில் தங்கள் அரசியல் கருத்துக்களைப் பரப்புவதற்கும் கட்சிக்கு ஆதரவாளர்கள் மூலம் நிதிகளைப் பெறுவதுமே கட்சிகள் வெளிநாடுகளில் பதிவுசெய்யப்படுவதற்கான காரணம் என்றும் மஞ்சுல கஜநாயக்க தெரிவித்தார்.

இருப்பினும், அத்தகைய கட்சியை பதிவுசெய்ய இலங்கையில் எந்தவொரு சட்ட கட்டமைப்பும் இல்லை அல்லது அத்தகைய கட்சியின் பிரதிநிதிகள் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## ஆஸியிலிருந்து நாடு கடத்துவதற்கு எதிராக

# ஈழக் குடும்பம் தாக்கல்செய்த வழக்கில் சாதகமான தீர்ப்பு

கொழும்பு, பெப். 18

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து தமிழ்க் குடும்பம் ஒன்று நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், சாதகமான பதில் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர்களான நடேசலிங்கம் அவரின் மனைவி பிரியா ஆகிய இருவரும் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் ஏதிலியாகச் சென்றிருந்தனர். இவர்கள் இருவரும் மெல்போர்னில் உள்ள ஏதிலிகள் முகாமில் தங்கியிருந்தபோது காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இதில் நடேசலிங்கத்துக்கும், பிரியாவுக்கும் அங்கு இரு பெண் குழந்தைகள் பிறந்தன. தற்போது மூத்த மகளுக்கு 6 வயதும், 2ஆவது மகளுக்கு 4 வயதும் ஆகிறது.

இந்தநிலையில், இந்த ஈழத் தமிழ்க் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட தற்காலிகமான விசா காலம் முடிந்துவிட்டதால், அவர்களை மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்துமாறு, ஆஸ்திரேலியாவின் கன்சர்வேட்டிவ் அரசு முடிவு செய்து 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் உத்தரவிட்டது.

இந்தநிலையில் தங்களை ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்துவதற்குத் தடைவிதிக்கக்கோரி நடேசன் குடும்பத்தினர் ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், இந்த மனுவை எதிர்த்து ஆஸ்திரேலிய அரசும் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கு பெடரல் நீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் அடங்கிய குழுவால் விசாரணை செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் அடங்கிய குழு "ஆஸ்திரேலியாவில் பிறந்த இரு குழந்தைகளுக்கும் விசா வழங்க அரசு மறுக்கக் கூடாது. தமிழ்க் குடும்பத்தினர் தங்கள் மகள்களுக்கான விசாவை விண்ணப்பித்துப் பெறலாம். நடேசன் குடும்பத்தினர் தொடர்ந்தும் ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்" என்று தீர்ப்பளித்தனர். (த-இ)

# பால்மா வகைகளின் இறக்குமதி 4 ஆண்டுகளில் நிறுத்தம்?

**கொழும்பு,பெப்.18**
**பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்ததும், அடுத்த 4 ஆண்டுகளில் பால்மா வகைகளின் இறக்குமதி நிறுத்தப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**



அதன்படி நாளொன்றுக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர் வரை செலவாகும் பால்மா இறக்குமதி நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கு 1.5 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
ஆகவே அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கறவைப் பசுக்களின் எண்ணிக்கையை 5 லட்சமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த கட்ட நடவடிக்கையாக பால்மாவகைகளின் இறக்குமதியை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதேநேரம் பச்சைப்பயறு, கம்சன், எள் மற்றும் கௌபி என்பவற்றின் இறக்குமதி ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கேரளக் கஞ்சாவுடன் வடக்கில் மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம் உடுத்துறை, மன்னார் உப்புக்குளம் ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் பருத்தித்துறை மற்றும் மன்னார் பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்ட 25 மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பளை மற்றும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-இ)

## தனியார் மருத்துவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும்

*வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 18
தனியார் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு விரைவில் கொரோனா தடுப்பூசி வழங்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனவரி மாதம் இறுதி வாரம் முதல் அரச சுகாதாரத்துறையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் முதற்கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
இரண்டாவது கட்டமாக தனியார் சுகாதாரத் துறையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள், பல் மருத்துவர்கள், பதிவு மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களில் ஓய்வு பெற்றவர்களுக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. வடமாகாணத்தில் இயங்கும் தனியார் மருத்துவமனைகளின் நிர்வாகங்கள் தங்களது நிறுவனங்களில் பணியாற்றும் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு மருத்துவமனை அமைந்துள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுடன் தொடர்புகொண்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர், என்றுள்ளது. (ஒ.5)

## பேரணி ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறியது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்கேற்றவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்தது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் குறித்த தீர்மானத்தை முன்வைக்க சபை ஏற்றுக் கொண்டது.
இதன்போது, பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்தியம்பும் வகையில் நடத்தப்பட்ட பேரணியை ஏற்பாடு செய்த வடக்கு, கிழக்கு மாகாண பொது அமைப்புகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.
இதேபோன்று இந்தப் பேரணியில் பங்குகொண்டு ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கும் பேரணியில் கலந்துகொண்ட அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. (த-319)

## கொடிகாமம்– பருத்தித்துறை பஸ்ஸில் பயணித்தவர்கள் தொடர்புகொள்ளவும்

கொடிகாமம்,பெப்.18
கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்ற தனியார் பஸ்ஸில் பயணித்தவர்கள் தமது பிரிவு பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொண்டு பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். கடந்த பத்தாம் திகதி திருகோணமலையிலிருந்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொடிகாமத்திலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்ட தனியார் பஸ்ஸில் பயணித்து பருத்தித்துறையில் இறங்கி அங்கிருந்து தும்பளைக்குச் ஓட்டோவில் சென்றுள்ளனர். அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்ற மறுநாள் கொரோனா அறிகுறி காணப்பட்டதால், அங்குள்ள மருத்துவமனையில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டபோது கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதனையடுத்து சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கொடிகாமத்திலிருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸில் பயணித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் விபரங்களை சேகரித்து வருகின்றனர்.
இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை தனங்களப்பு பகுதியில் நடத்திய எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையில் நாவற்குழி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஆசிரியை ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
இவர் பூநகரி வழியாக ஏ 32 வீதியில் பயணித்த தனியார் அரச அலுவலர்களுக்கான பஸ்ஸில் (NP NP 6456) பயணித்துள்ளார்.
இந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் தம்மைத்தாமே சுயதனிமைக்கு உட்படுத்திக் கொள்ளும்படி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)



## திண்மக்கழிவில் மின் உற்பத்தி: முதலாவது நிலையம் திறப்பு

கொழும்பு,பெப்.18
கெரவலபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது திண்மக் கழிவு மின் உற்பத்தி நிலையம், பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்றுத் திறக்கப்பட்டது.
இங்கு நாளொன்றுக்கு 600800 தொன் நகர திண்மக் கழிவைப் பயன்படுத்தி தேசிய மின் கட்டமைப்புக்கு 10 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
கொழும்பு நகர சபை, எய்ட்கன் ஸ்பென்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பவை இணைந்து இந்தத் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ளன.
இந்தத் திட்டத்தால் கொழும்பு நகரின் திண்மக்கழிவை அகற்றுவதற்கு நிலையான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
நிகழ்வில் அமைச்சர்களான டளஸ் அழகப்பெரும, சீ.பீ.ரத்நாயக்க, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, நாலக கொடஹேவா, சீதா அரம்பேபொல, நிமல் லன்சா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

## இராணுவ மருத்துவமனையில் தடுப்பூசி பெறப்போவதில்லை

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 18
இராணுவ மருத்துவமனையில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதனை தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்கவுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.
அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் இந்த விடயம் குறித்து ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.
இராணுவத்தின் கடந்தகால செயற்பாடுகளை, தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கொவிட் 19 தடுப்பூசியை மாவட்ட ரீதியிலான சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் செலுத்துவதற்கான வசதிகள் உள்ளபோதிலும், அதனை இராணுவ மருத்துவமனையில் செலுத்துவதற்கான காரணம் என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த-இ)

### தரம் 1 அனுமதிக்கு

# வடக்கில் 10 பாடசாலைகளில் எவரும் விண்ணப்பிக்கவில்லை

### மாணவர் சேர்க்கையும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 18

**வடக்கு மாகாணத்திலுள்ள 10 பாடசாலைகளில் தரம் 1 அனுமதிக்கு மாணவர்கள் எவரும் விண்ணப்பிக்கவில்லை. அத்துடன் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு தரம் 1 இற்கு மாணவர்கள் இணையும் எண்ணிக்கையும் வடக்கில் குறைவடைந்துள்ளது. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தகவல்களிலிருந்து இதனை அறிய முடிகின்றது.**

வடக்கிலுள்ள மூன்று கல்வி வலயங்கள் தவிர்ந்த ஏனைய கல்வி வலயங்களில் தலா ஓர் பாடசாலை வீதம், தரம் 1 அனுமதிக்கு எவரும் விண்ணப்பிக்காத நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துக் கல்வி வலயங்களிலும் ஒவ்வொரு பாடசாலைகள் இவ்வாறான நிலைமையில் காணப்படுகின்றன.
மன்னார் கல்வி வலயத்தில் மாத்திரம் 2 பாடசாலைகளில் இவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றன.
வடக்கு மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு தரம் 1 இற்கு 16 ஆயிரத்து 820 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து 15 ஆயிரத்து 703 ஆக மாறியுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 82 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு அது 511 பேரால் குறைவடைந்து ஆயிரத்து 591 ஆக மாறியுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 157 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021 ஆம் ஆண்டு 102 பேரால் குறைவடைந்து 8 ஆயிரத்து 55 ஆக மாறியுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு ஆயிரத்து 841 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021 ஆம் ஆண்டு 185 பேரால் குறைவடைந்து ஆயிரத்து 656 ஆக மாறியுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 686 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு 253 பேரால் குறைவடைந்து 2 ஆயிரத்து 433 ஆக மாறியுள்ளது.
மன்னார் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 54 மாணவர்கள் இணைந்துள்ளனர். 2021ஆம் ஆண்டு 86 பேரால் குறைவடைந்து ஆயிரத்து 968 ஆக மாறியுள்ளது. (ஒ.5)



## செட்டிகுளம் கோட்டத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளர்

வவுனியா,பெப்.18

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட செட்டிகுளம் கோட்டத்துக்கு புதிய கல்விப் பணிப்பாளராக என்.எஸ்.செல்வரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த மூன்று வருடங்களாக செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எம்.பரீட் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில், அந்த வெற்றிடத்துக்கு பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இ.ராஜ்மோகன் நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றிருந்தன. அதனடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றிய என்.எஸ்.செல்வரட்ணம் செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-18)



## காரைநகரில் கண்காட்சி

காரைநகர்,பெப்.18

காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப் பொருளியல் கண்காட்சி, காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. உதவி பிரதேச செயலாளர் செல்வி கஜனி குகஈசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்.மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ஜே.கில்பேட் குணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கண்காட்சி இடம்பெற்றது. (க-27,319)

## சிறுமியை கடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

சிறுமியை கடத்திச் சென்று இரு மாதங்களாக குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
கொடிகாமம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமியை கடத்திச் சென்றுள்ளார் என அராலியைச் சேர்ந்த இளைஞருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து இளைஞனும், சிறுமியும் கைது செய்யப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது இளைஞனை மார்ச் மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், சிறுமியை சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஐ-9)



மன்னார் வங்காலை பிரதேச மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பற்சிகிச்சைப் பிரிவுக்கான,பற்சிகிச்சைக்குரிய நாற்காலி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது. (க-56)

## மன்னார் மாவட்டத்தில் 1,250 பேருக்கு தடுப்பூசி

மன்னார்,பெப்.18

மன்னார் மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 250 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ர.விமோதன் தெரிவித்தார்.
தடுப்பூசிகள் யாவும் சுகாதார துறையைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசியால் பக்கவிளைவுகள் எவையும் இல்லை. எனவே இந்த மாதம் இறுதியில் அல்லது மார்ச் மாதம் முதல் வாரங்களில் முப்பது வயதுக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அறுபது வயதுக்கு மேற்பட்ட பொது மக்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படும்- என்றார்.(ஐ-213)

### இரு குளங்களின் கீழ்

## 570 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை

முல்லைத்தீவு,பெப்.18

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய இரு குளங்களின் கீழ் 570 ஏக்கர்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
இதற்கான கூட்டம் நேற்றுமுன்தினம் அம்பலப்பெருமாள்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.
அம்பலப்பெருமாள்குளத்தின் கீழ் 360 ஏக்கர்களிலும், கோட்டைகட்டியகுளத்தின் கீழ் 210 ஏக்கர்களிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.
இக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி, துணுக்காய் காணி உத்தியோகத்தர் எஸ்.ராஜ்குமார் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-13)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி பெப் 18

சாவகச்சேரி நகரசபை, வேள்ட் விஷன் மற்றும் செவனத நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டு வரும், திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் 10 சிறு தொழில் முயற்சியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.
இதற்கென மிகவும் பொருண்மியம் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறு தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், நேர்முகத் தேர்வு 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் நகரசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.
மேலதிக தகவல்களை 077 351 2968 மற்றும், 077 104 8993 ஆகிய. தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாம்பின் கால் பாம்பறியும்

இலங்கையில் எங்கள் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி கால்பதிக்க வேண்டுமென கட்சித் தலைவர் அமித் ஷா என்னிடம் கூறினார். இதன் மூலம் எமது கட்சியை உலக அளவிலான கட்சியாக வளர்த்தெடுப்பதே அவரின் கனவு' என்று இந்தியாவின் திரிபுரா மாநில முதலமைச்சர் பற்றவைத்த நெருப்பு, இலங்கையில் பெரிதாகச் சுவாலை விட்டெரியத் தொடங்கியுள்ளது.

பா.ஜ.க.தான் இந்தியாவின் இப்போதைய ஆளும் கட்சி. முற்றுமுழுதாக இந்துத்துவச் சிந்தனைகளால் கட்டியெழுப்பப்பட்ட இந்தக் கட்சி, இந்தியாவின் அசைக்கமுடியாத தனிப்பெரும் கட்சியாகவும் விஸ்வரூபமெடுத்து நிற்கின்றது. இப்படி பா.ஜ.கவை எவராலும் வீழ்த்தமுடியாத கோலியாத்தாக மாற்றியதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எவ்வளவு பங்கிருக்கிறதோ, அதேயளவு பங்கு அந்தக் கட்சியின் இப்போதைய தலைவர் அமித் ஷாவுக்கும் உண்டு. தமிழகத்தைத் தவிர இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலெல்லாம் பா.ஜ.க.வை வெற்றிநடைபோட வைத்தவை அமித் ஷாவின் நுண்ணிய காய்நகர்த்தல்களே. தனியே கட்சியையும், இந்து மதத்தையும் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், ஏனைய சிறுபான்மை மதங்களையும், மக்களையும் நசுக்கும் கைங்கரியத்தையும் கனகச்சிதமாக பா.ஜ.க செய்து வருகின்றது.

இந்தியாவில் பா.ஜ.க. என்ன செய்கின்றதோ, அதையே இலங்கையில் ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன அரசாங்கமும் செய்துவருகின்றது. தங்களது மதத்தை விரிவாக்கல், சிறுபான்மை மதங்களையும், மக்களையும் அடக்குதல் என்பவற்றையே பெரமுன அரசாங்கம் முழுமுதற் பணியாகக் கொண்டுள்ளது. பா.ஜ.கவுக்கு எப்படி இந்து மதமோ அதேபோல பெரமுனவுக்கு பௌத்தம். அவ்வளவுதான் வித்தியாசம். மற்றும்படி மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றி, அடக்கி, ஒடுக்கி ஆட்சியை அனுபவிப்பதே அவர்களின் யுக்தி.

இந்த நிலையிலேயே, இந்தியாவை விட்டு அயல்நாடுகள் மீதும் பா.ஜ.க கண்வைக்கத் தொடங்கியுள்ளது. அதன் ஒரு அறிகுறியே அமித் ஷாவின் கனவு பற்றி திரிபுரா முதலமைச்சர் சொன்ன கதை. இலங்கையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இந்தியா காலாதிகாலமாக முயன்றே வருகின்றது. தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கியது தொடக்கம் கொழும்புத் துறைமுக முனையத்தைக் கேட்பது வரை அனைத்தும் இந்தியா தன் அதிகாரத்தை இங்கு நிலைநிறுத்தவே. அதன் இன்னொரு கட்டமாகவே இந்தியாவின் ஆளும் கட்சியான பா.ஜ.கவை இலங்கையிலும் ஒரு கட்சியாகப் பதிவு செய்ய முயற்சிகள் நடக்கின்றன போலும். அப்படி இன்னொரு நாட்டின் கட்சியை இலங்கையில் பதிவுசெய்ய சட்டத்தில் இடமில்லை. ஆனாலும் இலங்கையில் உள்ளவர்களைக் கொண்டு (இலங்கைக்கு மட்டும் உரித்தான) புதிய ஒரு கட்சியாக பதிவு செய்யமுடியும். சிலவேளைகளில் இலங்கையை மிரட்டுவதற்காகக் கூட இப்படி ஒரு கதையை பா.ஜ.க அவிழ்த்து விட்டிருக்கலாம்.

ஆனால் பா.ஜ.க இலங்கைக்குள் வரப்போகின்றது என்ற கதையைக் கேட்ட மறுநொடியே மண் எண்ணெய் பட்ட பாம்பு போல ஏன் பதறவேண்டும்? பாம்பின் காலை பாம்பறியும். ஒரு மதவெறி கொண்ட கட்சியின் நோக்கத்தை இன்னொரு மதவெறி கொண்ட ஆட்சியாளர்களே உணர்வர். பா.ஜ.க. இலங்கைக்குள் நுழைந்தால், பௌத்தத்தின் தனிக்காட்டு ராஜ்ஜியத்துக்கு நிச்சயமாக பெரும் முட்டுக்கட்டை ஏற்படும். இந்தியாவின் அனுசரணைக்காக இங்குள்ள இந்து மதத்தையும் காப்பாற்றுவதுபோல இலங்கை அரசாங்கம் நடிக்க வேண்டும். இல்லாவிட்டால், வேறுவகையில் அழுத்தங்கள் உருவாக்கப்படும். எனவேதான் இத்தகைய சிக்கல்களை ஊகித்தே பேரினவாதிகள் கூச்சலிடத் தொடங்கியுள்ளனர். யார் கண்டது, ஒருவேளை பா.ஜ.க இலங்கைக்கு வந்துதான் புத்தரின் பெயரால் நிகழும் அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி விழப்போகிறதோ?

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# சீனாவுக்கு தீவுகளை வழங்கியதால் இந்தியாவின் அழுத்தம் அதிகரிக்கும்

## எச்சரிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 18



**யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளதால், இலங்கை மீதான இந்தியாவின் அழுத்தங்கள் அதிகரிக்கக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே சுட்டிக்காட்டினார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனக்குத் தேவையான விதத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவால் ஆட்டம் போட முடியாது என்று ஆளுங்கட்சியினர் கூளுரைத்தனர். ஆனால் அங்குள்ள படைமுகாம்களை அகற்றுவது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, அம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள காணிகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற திட்டத்தின் கொள்கையானது இன்று வாரந்தோறும் மாற்றமுறும் நிலையே காணப்படுகின்றது.


யாழ்.குடாநாட்டிலுள்ள 3 தீவுகளை மின்சக்தி உற்பத்திக்காக சீனாவுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. இந்தத் திட்டம் மீள்பரிசீலனை செய்யப்பட மாட்டாது. தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். மேற்படி தீவுகளை சீனாவுக்கு வழங்குவது தொடர்பில் அங்கு வாழும் மக்களுக்குக் கூட எதுவும் தெரியாது.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் தற்போது கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கு அண்மித்த பகுதியில் உள்ள தீவுகளை சீனாவுக்கு வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதால், இந்தியா இனியும் கைகட்டி, வேடிக்கை பார்க்காது. இலங்கை மீதான இந்தியாவின் அழுத்தங்கள் அதிகரிக்கக் கூடும். அந்த வகையில், தற்போதைய அரசின் வெளிநாட்டு மற்றும் பொருளாதாரக் கொள்கை என்னவென்பது புரியவில்லை - என்றார். (க-44)

சாதாரண தரப் பரீட்சைக்கான

# அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் விநியோகம்

கொழும்பு, பெப்.18



க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்துள்ளார்.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்களும் தபால் மூலம் அனுப்பப்படவுள்ளன.

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 4ஆயிரத்து 513 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது எனவும், இம்முறை பரீட்சையில் 6லட்சத்து 22ஆயிரத்து 352 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பரீட்சைக்கான சுகாதார வழிகாட்டல்

கொழும்பு, பெப்.18

கொரோனாவுக்கு மத்தியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகளுக்கான பாதுகாப்பு சுகாதார வழிகாட்டல்களை சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டல், கல்வி அமைச்சின் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் சாதாரண தரப் பரீட்சையை விசேட இலக்காகக் கொண்டது. மேலும் பொது மக்கள் .கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான பொதுவான வழிகாட்டல்களையும் கொண்டமைந்துள்ளது. (ச-இ)

## சொகுசு பஸ் சேவை மீள ஆரம்பம்

வவுனியா-கொழும்புக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தாக்கத்தை யடுத்து வவுனியாவுக்கும், கொழும்புக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது. நாடு இயல்புக்கு திரும்பியுள்ள நிலையில் போக்குவரத்துப் பயணிகளின் நன்மை கருதி வவுனியா - கொழும்புக்கு இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த சொகுசு பஸ்சில் பயணிப்பவர்களின் உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அரச அறிவுறுத்தலுக்கு அமைவாகவே சேவைகள் இடம்பெறும் என அதன் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை, வவுனியாவில் இருந்து தினமும் பிற்பகல் 2.30 மணிக்கும், இரவு 11.30 மணிக்கும் கொழும்பு நோக்கியும், கொழும்பில் இருந்து தினமும் காலை 11 மணிக்கும், இரவு 9.30 மணிக்கும் வவுனியா நோக்கியும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-18)

# வீட்டுத்திட்ட நிதி கோரி பயனாளிகள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

**சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் மக்கள் தமக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கான மீதிப் பணத்தைப் பெற்று தருமாறு கோரி, வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலம் கிடைக்கப்பெற்ற வீட்டுத் திட்டத்துக்கு, மிகுதிப் பணம் வழங்காத காரணத்தால், பல்வேறு துன்பங்களைத் தாம் எதிர்நோக்கி வருகின்றனர் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நிதி நிறுவனங்களிடமும், நகைகளை அடகு வைத்தும், உறவினர்களிடம் பணம் பெற்றுமே தமது வீடுகளைக் கட்டி முடித்தோம் என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

"வீடு தரும் போது சந்தோசத்துடன் ஏற்றுக் கொண்டு தற்போது கடன் தொல்லைகளுடன் வாழ்கின்றோம், பெரியவிளான் மக்களின் வீடுகளை நேரடியாக வந்து பாருங்கள்', எங்களுடைய ஜனாதிபதி அவர்களே ஏன் கண்ணை மூடிக் கொண்டிருக்கின்றீர்கள்? கண்ணைத் திறந்து முடிவு கூறுங்கள், நிம்மதி இழந்து அல்லல்பட்டு வாழ்வா சாவா என்று தவிக்கின்றோம், பழைய வீடும் இல்லை, புதிய வீடும் இல்லை, மின்சார வசதியில்லை, அல்லல்பட்டு அவதியுறுகிறோம்" போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (சு-27)



## ஒன்றுடன் ஒன்று மோதுண்டு நான்கு வாகனங்கள் விபத்து

### ஒருவர் காயம்

வவுனியா, பெப். 18

வவுனியா - கண்டி வீதியில் வன்னி இராணுவத் தலைமையகத்துக்கு அருகே நேற்றுக் காலை நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின. இதில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து கண்டி வீதியூடாக தென்பகுதி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் மறுபக்கம் பயணிக்க முற்பட்டுள்ளது. பின்னால் பயணித்த ஹைஏஸ் வாகனமும் பாரவூர்தியும் இதை அவதானித்து தரித்து நின்றுள்ளன. பாரவூர்தியைப் பின் தொடர்ந்து வந்த பட்டா ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து பாரவூர்தியின் பின்பகுதியில் மோதியது. பாரவூர்தியும் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து ஹைஏஸ் வாகனத்துடன் மோதுண்டது. ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-110)



2020/2021 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெல் கொள்வனவு நடவடிக்கைகள் நானாட்டான் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலையில் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகின. மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மேலதிக மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மரின்குமார், நெல் சந்தைப்படுத்தும் சபையின் பிரதிநிதிகள், மாவட்ட விவசாயிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர். (ஐ-213)

## சங்கானையில் மனைப் பொருளியல் கண்காட்சி

கொடிகாமம், பெப்.18

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலைய மனைப் பொருளியல் டிப்ளோமா பாடநெறி மாணவிகளின் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கரத்தை இரத்தினசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன் தலைமையில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி பொ.பிரேமினி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கிராம அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் நா. பஞ்சலிங்கம், கௌரவ விருந்தினர்களாக சங்கானை ஓய்வு நிலை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் த.சாந்தலிங்கம் மற்றும் மாவட்ட செயலக தொழிற்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

## தரமற்ற கிரவலைப் பயன்படுத்தி வன்னேரிக்குளம் வீதி சீரமைப்பு

### கிளி.மாவட்டச் செயலருக்கு மனு

கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி வன்னேரிக்குள வீதியில் தற்போது நடைபெறுகின்ற வீதிச் சீரமைப்புகளில் தரமற்ற கிரவல் மணல் பயன்படுத்தப்படுகின்றது என்று தெரிவித்து கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் நா.செல்வநாயகம் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வன்னேரிக்குளம் தொடக்கம் ஜெயபுரம் ஊடாகச் செல்லும் வீதியின் சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் வேலைத் திட்டத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற கிரவலின் தரம் குறைவானதாகக் காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இவ்விடயம் தொழில்நுட்ப ரீதியாகப் பரிசீலிக்கப்படவில்லை. எனினும் எமது அவதானிப்புக்கமைய குறைபாடு உள்ளதை பொது மக்களது கோரிக்கைக்கமைவாக சுட்டிக் காட்டுகின்றேன். உறுதியானமுறையில், பொருத்தமான கண்காணிப்பின் கீழ் இவ்வேலைகள் நடைபெறவில்லை என்பது பொது மக்களதும் எனதும் அவதானிப்புக் கருத்தாகும். விரைவாக தகுந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த உதவுமாறு பொது மக்கள் சார்பாக பணிவுடன் வேண்டி நிற்கின்றேன் என்றுள்ளது. (ப-13)

# பரந்தன் மக்களின் வாழ்வாதார நிலங்களை பறிக்கவேண்டாம்

### கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.18

பரந்தனில் உள்ள இரசாயனத் தொழிற்சாலையை மீள இயக்கும்போது, அந்தக் காணிகளில் வாழ்ந்துவரும் மக்களின் குடியிருப்பு நிலங்களையும், வாழ்வாதாரக் காணிகளையும் மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தை மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்துக்குரிய 217 ஏக்கர் அளவு கொண்ட காணியை மீளப்பெறுவது தொடர்பான முயற்சியை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். குறித்த காணியில் 15 ஏக்கர் நிலத்தை இராணுவத்துக்கு வழங்க முடியும் என்றால், 35 ஆண்டு காலத்துக்கும் மேலாக அங்கு வாழ்ந்துவரும் 20 ஏக்கர் வரையான பொது மக்களது வாழ்விடங்கள் மற்றும் 46ஏக்கர் வரையாக வயல் நிலங்களும் மீளப்பெறப்பட்டு மக்களுக்கு வழங்கப்படவேண்டும். தனித்து இரசாயன கைத்தொழிற்சாலை என்பதால் மட்டுமன்றி மக்களின் சுற்றுப் புறச்சூழல் பாதிப்பு குறித்தும் மக்கள் திருப்தி அடைதல் வேண்டும். எனவே பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களினதும் கருத்துக்கள் பெறப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றார். (ஐ-6)

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

சாவகச்சேரி,பெப்.18

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதபாடக் கருத்தரங்கு கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இரணைமடுக்குளத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த நேசதுரை நிலக்சனின் 3 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ஐ-131)

# காலபோக செய்கைக்கு வரி அறவீடு

கொடிகாமம், பெப்.18

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உள்பட்ட விவசாயிகளிடமிருந்து 2021 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களுக்கு வரி அறவிடப்படவுள்ளது. எழுதுமட்டுவாழ் தெற்கு சிறீகணேசா சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களால் வரி அறவிடப்படும். அனைத்து விவசாயிகளும் தமக்கான வரியை செலுத்துமாறும், 2020 ஆம் ஆண்டு வரி செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான உரமானியம் பெற்ற பற்றுச் சீட்டு என்பவற்றை கொண்டு வருமாறும், பரப்புக்கு 2 ரூபா வீதம் வரி அறவிடப்படும் எனவும் எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-159)

★★★★

சாவகச்சேரி, பெப். 18

தென்மராட்சி பிரதேச கமக்கார அமைப்பு, காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளுக்கு இவ்வருடத்துக்கான காலபோக ஏக்கர் வரி அறவிடும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான ஏக்கர் வரி அறவீடு நாளை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் உள்ள முன்னாள் கமக்காரர் அமைப்பின் தலைவர் வ.சதானந்தத்தின் வீட்டில் இடம்பெறவுள்ளது.

அமைப்புக்குட்பட்ட விவசாயிகள் கடந்த வருடம் செலுத்திய ஏக்கர் வரி பற்றுச்சீட்டு அல்லது தமது வயற்காணியின் உறுதியின் பிரதியை சமர்ப்பித்து தமது விவசாய நிலத்துக்கான ஏக்கர் வரியை செலுத்துமாறு அமைப்பின் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ச-9)

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# நாளைமறுதினம் தீச்சட்டிப் போராட்டம்!



**கிளிநொச்சி, பெப். 18**

**எதிர்வரும் 20ஆம் திகதி தீச்சட்டி போராட்டத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இந்த அழைப்பை விடுத்தனர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் கிளிநொச்சி ஊடக அமையத்தில் இடம்பெற்றது. இதன்போதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த உறவுகளால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலேயே அதைமுன்னிட்டு இந்தத் தீச்சட்டிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்தத் தீச்சட்டிப் பேரணியானது கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



எஸ்.டி.பி. வங்கியின் யாழ்ப்பாணக் கிளையால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. வங்கி முகாமையாளர் செல்லையா சிவதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் திருமதி தேவறஞ்சினி சிவாஸ்கரன் கலந்து கொண்டார். (ஐ)

# போதையில் சாரத்தியம் இருவருக்கு அபராதம்

கொடிகாமம், பெப்.18

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மதுபோதையிலும் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று இவர்கள் முற்படுத்தப்பட்ட போது சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் மதுபோதையிலும் வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்காமல் மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (வ-159)

# புரேவியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

சாவகச்சேரி, பெப்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட பொருண்மியம் நலிந்த 100 குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்வந்துள்ளனர். புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் 2 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இவர்களில் தமது வதிவிடங்களைத் திருத்த முடியாத நிலையில் வாழும் குடும்பங்களைப் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்து அவர்களின் வதிவிடத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

அவ்வாறான குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பராமரிப்பற்ற சிறுவர்களை பொறுப்பெடுக்க உத்தரவு

சாவகச்சேரி, பெப். 18

தென்மராட்சி பிரதேசத்தில் பராமரிப்பு அற்ற நிலையிலுள்ள நான்கு சிறுவர்களைப் பொறுப்பெடுக்குமாறு பிரதேச செயலகத்துக்கு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

பெற்றோர் இல்லாத நிலையிலும், பெற்றோர் இருந்தும் பொருண்மியம் நலிந்த நிலையிலும் குறித்த சிறுவர்கள் காணப்படுகின்றனர்.

பிரதேச செயலகம் மூலம் பொறுப்பானவர்களை நியமித்து, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கி பராமரிக்க வேண்டுமென பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போது அந்தச் சிறுவர்களைப் பொறுப்பெடுத்துப் பராமரிக்கக்கூடியவர்களைத் தெரிவு செய்து உதவித் தொகை வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-9)

# நெல் வழங்காவிடின் உரமானியம் ‘கட்’!

### கமநலசேவைத் திணைக்களம் அறிவிப்பு

முல்லைத்தீவு,பெப்.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையின் போது அறுவடை செய்த நெல்லை ஒவ்வொரு விவசாயியும் நெல் கொள்வனவுச் சபைக்கு கட்டாயமாக வழங்கவேண்டும்.

இவ்வாறு நெல்லை வழங்கத் தவறும் விவசாயிகளுக்கான மானிய உரம் இடைநிறுத்தப்படும் என்று கமநல சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாயிகளுக்கு ஒலிபெருக்கி மூலம் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டு வருகிறது. 3.5 ஏக்கருக்கு உட்பட்ட அளவில் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள், நெல்கொள்வனவு பகுதிக்கு ஆயிரம் கிலோ நெல்லையும், 3.45 தொடக்கம் 5 ஏக்கர் வரையில் பயிர்செய்கையை மேற்கொண்டவர்கள் ஆயிரத்து 500 கிலோ நெல்லையும் நெல்கொள்வனவு அதிகார சபைக்கு வழங்கவேண்டும். இதனை வழங்கத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் இவர்களுக்கான உரமானியம் இடைநிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-19)



### அம்பலப்பெருமாள்குள அபிவிருத்தி

# கடந்த காலங்களைப்போன்று இம்முறை கைவிடப்படாது!

முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், பழையமுறிகண்டிக்குளம், ஐயன்கன்குளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதனூடாக அப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கடந்த பெருமழையின் போது கூடுதலான நீர் வரவால் அம்பலப்பெருமாள்குளத்தின் அணைக்கட்டுக்கு ஆபத்தான சூழல் ஏற்பட்டது. இதன்போது இப்பகுதி விவசாயிகள் எமது திணைக்களத்துடன் இணைந்து குளத்தின் அணைக்கட்டைப் பாதுகாக்க ஒத்துழைத்தனர்.

இந்நிலையில் அம்பலப்பெருமாள்குளத்துக்கு முன்னுரிமை வழங்கி முக்கியமான அபிவிருத்தி வேலைகள் இடம்பெறவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். கடந்த பத்தாண்டுகள் கால இடைவெளியில் அம்பலப்பெருமாள்குளம் புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டும் வேலைகள் இன்னமும் முழுமை பெறவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த பணிப்பாளர், வேலைகளைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்கள் தமது சுய நலன்களுக்காக வேலைகளை முழுமையாக செய்து முடிக்கவில்லை. அதற்காக ஒப்பந்தகாரர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை. குளங்களின் வேலைகள் சரியான முறையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றார். (வ-13)

# மன்னார் மாவட்ட வீட்டுத் திட்ட பயனாளிகளின் 'திரிசங்குநிலை'

*பிரதேச செயலர் எடுத்துரைப்பு*

**மன்னார், பெப். 18**

**மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் வீட்டுத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமையால், அத்திபாரம் போட்ட வீடுகளைக் கட்டி முடிக்காமல் உள்ளனர். இதேவேளை, அவர்களை வேறு வீட்டுத் திட்டங்களுக்கும் உள்வாங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.**

வீட்டுத் திட்டப் பயனாளிகளின் திரிசங்கு நிலையை மன்னார் பிரதேச செயலர் மா.பிரதீப் எடுத்துரைத்தார். மன்னார் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். 'கடந்த ஆண்டு இறுதியிலும் இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் இயற்கை இடர் எமது பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்களையே அதிகளவில் ஆட்டிப் படைத்தது. பலரது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக முன்னைய காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களில் எமது பிரிவில் 2ஆயிரத்து 171 வீடுகளுக்கு அத்திபாரங்கள் போடப்பட்டன. அந்தக் குடும்பங்கள் வீடுகளை கட்டி முடிப்பதற்கு எஞ்சிய நிதி விடுவிக்கப்படவில்லை. அவர்களை வேறு வீட்டுத் திட்டங்களிலும் உள்வாங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றார் பிரதேச செயலர். (ஒ.213)



## மாணவர்களுக்கு பழ மரக்கன்றுகள்

**முல்லைத்தீவிலும் திட்டம் ஆரம்பம்**

முல்லைத்தீவு, பெப்.18

தரம் 1இல் கல்வி கற்க ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நாடு முழுவதும் இடம்பெற்று வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய ஆரம்ப நிகழ்வு முல்லைத்தீவு இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மாவட்ட விவசாயப் பிரிவு மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை வளாகத்தில் பழ மர நடுகை இடம்பெற்றதுடன் மாணவர்களுக்கான பழ மரகன்றுகளும் வழங்கப்பட்டன. (வ-115)

## பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

விஞ்ஞானத்துறை மற்றும் பொது ஆங்கிலப் பாடங்களுக்கு நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையை எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 'செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், எனும் முகவரியுடனேயோ, அல்லது 021-2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ப)

## டெங்கு தாக்கத்திலிருந்து மீண்டது தென்மராட்சி

சாவகச்சேரி, பெப்.18

கடந்த நான்கு வருடங்களாக தென்மராட்சிப் பிரதேசம், அதி உயர் டெங்கு அபாய வலயமாகக் காணப்பட்டது. இருப்பினும் புரேவிப் புயல் மற்றும் பெருமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பிரதேசத்தில் டெங்குவின் தாக்கம் குறைவடைந்துள்ளது.

பொதுவாக முன்னைய காலங்களில் நவம்பர், டிசெம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குவின் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

எனினும் கடந்த ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிகளிலும் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். பிரதேசத்தில் டெங்கு ஏற்படாமல் இருக்க மக்கள் வழங்கிய ஒத்துழைப்பே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள், பொலிஸார், படையினர் , சுகாதாரக் குழுக்கள் போன்ற தரப்பினர் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் மேற்கொண்ட பரிசோதனைகளாலும், மக்கள் விழிப்புடன் செயற்பட்டமையாலுமே டெங்குவின் தாக்கம் இம்முறை பெருவீழ்ச்சியடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-9)



## பெண்களுக்கெதிரான வன்முறை; விழிப்புணர்வு செயற்பாடு

வவுனியா, பெப்.18

பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பால்நிலை சமத்துவத்துக்கு எதிரான செயற்பாடுகளைக் குறைக்கும் நோக்கில் சமூக மட்டத்தில் உள்ள மகளிர், மாதர் சங்கங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம், பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் பண்டாரிக்குளம், உக்குளாங்குளம் மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி விதுசினி, அக்சன், எய்ட் நிறுவனத்தின் முகாமையாளர் ரம்சிகா, ஒருங்கிணைப்பாளர் நிப்ரஸ், நிறுவனத்தின் இணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப-18)



## தச்சடம்பன் கிராமம் வங்கியால் தத்தெடுப்பு

முல்லைத்தீவு, பெப். 18

ஒரு வங்கி ஒரு கிராமத்தை தத்தெடுக்கும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஒட்டுசுட்டானில் இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதியின் எண்ணக்கருவில் வடக்கு மாகாண ஆளுநரின் சிந்தனைக்கு அமைவாக இந்தச் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவில் முதற்கட்டமாக 11 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் கடன்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. (ப)

## தொற்றாளருடன் தொடர்பு: பி.சி.ஆர். முன்னெடுப்பு

நானாட்டான், பெப். 18

நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் தொடர்புபட்ட நபர்கள், நானாட்டான் பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. நானாட்டான் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தலைமையில் இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் சுமார் 108 பேருக்கு நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-56)





## 'பனுவல்' ஆவண இறுவட்டு வெளியீடு

கிளிநொச்சி,பெப்.18

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கலை,கலாசார,பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் 'பனுவல் ' என்ற ஆவணப்படத்தின் இரண்டாவது பாக இறுவட்டு வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டார். (ஐ-113)

# இன்றைய நாள்

**மேடம்:** புதிய வேலைக்கான முயற்சிகள் வெற்றிபெறும். கனவு நனவாகும். மனத்துணிவு அதிகரிக்கும். பெண்களின் எண்ணம் நிறைவேறும். அலுவலக நிகழ்வு திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** கூடுதல் கவனம் செலுத்திப் பணிகளை முடிப்பீர்கள். அதிகாரியின் குறிப்பறிந்து செயற்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். வெற்றிக்கு தேவையான ஆதரவுகள் கிடைக்கும்..

**மிதுனம்:** போட்டிகளில் பங்கேற்கும்போது கவனம் தேவை. பிள்ளைகளின் திறமைகள் வெளிப்பட்டுப் பாராட்டுப்பெறுவர். வீண் அலைச்சல் குறையும். வாய்ப்புக்கள் கூடும்.

**கடகம்:** மனதுக்குப் பிடித்தவருடன் இருந்த சச்சரவுகள் மறையும். இளைய சகோதரரிடமிருந்து இனிய செய்தி வந்து சேரும். மனக் கவலைகள் அகலும் நாள். வரவு திருப்தி தரும்.

**சிம்மம்:** பணிக்காகச் சற்று நீண்ட பயணம் செல்லத் திட்டம் உருவாகும். நண்பர் ஒருவர் உங்களிடம் மனம் விட்டுப் பேசி நிம்மதி அடைவார். கவனம் தேவை.

**கன்னி:** பொறுப்புகளை அலட்சியம் செய்து புறக்கணிக்க வேண்டாம். மற்றவர் பிரச்சினையை தீர்க்கும் நடவடிக்கையில் வெல்வீர்கள். பணியிட மாற்றத்தைச் சந்திப்பீர்கள்.

**துலாம்:** பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனமாக இருக்கவும். எதிர்பாலினத்தினரால் நன்மையும், லாபமும் கிடைக்கும்.

**விருச்சிகம்** எதிரிகள் அடங்குவர். பழைய கடனில் ஒரு பகுதி வசூலாகும். வாழ்க்கைத்துணையின் அன்பும், ஆதரவும் உற்சாகம் தரும். பணி பற்றிய அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**தனுசு:** சமூக அந்தஸ்து உயரும். விலகிய உறவினர் தொடர்பு கொள்வர். உறவினரால் சில தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும். உங்கள் ஆலோசனையைப் பிறர் ஏற்பது மகிழ்ச்சி தரும்.

**மகரம்** தாயாருடன் இருந்துவந்த வீண் விவாதம் முடியும். பெண்களுக்கு வெளிவட்டாரத்தில் புது அனுபவம் ஏற்படும். அவசரமோ, பதற்றமோ இல்லாதபடி பார்த்துக் கொள்ளவும்.

**கும்பம்:** மகிழ்ச்சியும், சிரமமும் உங்கள் செயல்கள் மூலம் சமமாக வரும். நேற்றிருந்த தொல்லைகளின் தீவிரம் இன்று மெல்லக் குறையும் .மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும்.

**மீனம்:** சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று அழைப்பு வரும். நேர்மறை எண்ணங்கள் அதிகமாகும். பணிச்சுமை கூடும். நீங்கள் நம்பிய நபர் உங்களைக் கைவிடாமல் உதவிக்கு வருவார்.

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம், மானிப்பாய் கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலய, ஞான சக்தி வைரவர் ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு தினமும் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி முதல் இடம்பெற்று வரும் இந்தச் சொற்பொழிவு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஆலய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று வியாழக்கிழமை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'விநாயகர் திருவிளையாடல்', நாளை வெள்ளிக்கிழமை இளம் சைவப்புலவர் க.கைலவாசன் 'தும்பிக்கை மீது நம்பிக்கை வைத்த பாட்டி', 20 ஆம் திகதி பிரசங்க பூஷணம் சைவப்புலவர் கந்த சத்தியதாசன்,

'குட்டிக்கும்பிடலும் தோப்புக்கரணம் போடலும்', 21 அம் திகதி சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் ச நவநீதன் 'சதுர்த்தியும் அங்காரகன் வழிபாடும்' , 22 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் க.கைலவாசன் 'நம்பிக்கு அருள் செய்த லம்போதரன்', 23 ஆம் திகதி பிரசங்க பூஷணம் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் 'வல்லாளனும் கணபதியும்',24 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் ச நவநீதன் 'மகோற்கட விநாயகர் அருள்', 25 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் க.கைலவாசன் 'கணபதியால் ஆட்கொள்ளப்பட்ட கபிலர்', 26 ஆம் திகதி பிரசங்க பூஷணம் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் 'தக்கனுக்கு அரசு கொடுத்த விநாயகர் ', 27 ஆம் திகதி இளம்சைவப்புலவர் ச .நவநீதன் 'விநாயகர் விசுவரூபதரிசனம்' , 28 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் க.கைலவாசன் 'மகா பாரதத்தை எழுதிய விநாயகர்' ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஐ)


## தொற்றிலிருந்து மீள விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.18

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாக பூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

கொரோனாத் தாக்கத்திலிருந்து இலங்கை மக்களும், உலக மக்களும் விடுபட வேண்டி இடம்பெறவுள்ள இந்த வழிபாட்டின் நிறைவில், தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்களின் அருளாசி உரையும் இடம்பெறவுள்ளது.

இந்த வழிபாடுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடியாக ஒலிபரப்பாகும். (வ)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்துக்கு அனலை கல்வி அறக்கட்டளை ஊடாக வித்தியாலய 1988ஆம் ஆண்டு சாதாரண தர வகுப்பு அணியினரால் ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (வ-9)

## கந்தபுராணப் படிப்பு

வட்டுக்கோட்டை,பெப்.18

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து கந்த புராணப் படிப்பு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தவக்கால சிந்தனை

### சிலுவை வெற்றியின் சின்னம்

“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள் தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.

ஒவ்வொரு மனிதனும் பல்வேறு தேடல்களுடன் வாழ்வை நகர்த்துகின்றான். தேடலின் பாதை சிலருக்கு இறையடியாகவும், சிலருக்கு அதிகாரமாகவும், பலருக்கு பட்டம், புகழ், பணம், ஆடம்பரவாழ்வு, மண், பெண், பொன் ஆசையின் பெட்டமாகவும் அமைகின்றது. எதைத் தேடலாம் என்ற தெரிவுச் சுதந்திரம் எம் பக்கமே விடப்பட்டுள்ளது.

கடவுளுக்கு உரியவற்றின் தேடல்கள், முதலில் ஒறுத்தலும் துன்பமும் பரிகாசமாகவும் அற்பமானதாகவும் தென்படும்.

காரணம் கடவுளின் கட்டளைகள் மதிப்பீடு களின்படி ஒழுகுவது சாதாரண காரியமல்ல. ஆனால் காலப் போக்கில் நாம் தேடுகின்ற நிறைவை நம் வாழ்வுக்குள் அது கொண்டுவந்துவிடும்.

மாறாக வாழ்வின் நிறைவை இன்ப வேட்கைகளிலும், தவறான வழிகளிலும் தேடும்போது இன்பம் பயப்பது போன்று தோன்றினாலும், இறுதியில் தீராத துன்பத்துக்குள் தள்ளி விடுகிறது. வாழ்வும், சாவும், நன்மையும், தீமையும் எமக்கு முன்னால். அவற்றில் எதைத் தேர்ந்தெடுக்கின்றோம்?

நாமும் வாழ்ந்து பிறரும் நலம்பெற வேண்டுமெனில் சுயத்தை இழந்துதான் ஆகவேண்டும். அன்பை வாழவைக்கும்படி இறங்கி பணியாற்றத்தான் வேண்டும்.

விரோதியையும் மன்னித்துத்தான் ஆகவேண்டும். சிறுமைகளைத் தாங்கி சிலுவைகளைச் சுமந்து செல்லத்தான் வேண்டும். அப்போது முடிவிடம் நிச்சயம் இனிமையும் வெற்றியுமாக அமையும்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை

# மேற்குமுனைய அபிவிருத்தியையும் இந்தியாவுக்கு வழங்கவே முடியாது!!

## போர்க்கொடி தூக்கியது ஊழியர் சங்கம்

**கொழும்பு, பெப்.18**

**கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்கு இந்தியாவையும் ஜப்பானையும் தொடர்புபடுத்துவதற்கு அகில இலங்கை துறைமுக பொது ஊழியர்கள் சங்கம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா, ஜப்பான் கூட்டு முயற்சியால் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல தரப்புக்களின் எதிர்ப்புக்களால் கைவிடப்பட்டன. அதற்குப் பதிலாக மேற்கு முனையத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக மேற்குமுனைய அபிவிருத்திக்கு முதலீட்டாளர்களைப் பெயரிடுமாறு இந்தியா மற்றும் ஜப்பானிடம் துறைமுகங்கள் அமைச்சின் செயலர் கோரியிருந்தார்.

இந்த நிலையில் அகில இலங்கை துறைமுக பொது ஊழியர்கள் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்கு இந்தியாவையும் ஜப்பானையும் தொடர்புபடுத்துவதற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றோம். மேலும் மேற்கு முனையத்தை, இலங்கை துறைமுக அதிகார சபையே அபிவிருத்தி செய்து, கொண்டு நடத்த வேண்டும் என்பதே எங்களது கோரிக்கையாகும். தேசிய வளங்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு வழங்குதல் என்பவை மேற்கொள்ளப்படமாட்டாது என வாய்மூலமும் எழுத்துமூலமும் வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசு, கடந்த மாதம் 31ஆம் திகதி வெளியிட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைய, இந்தியாவும் ஜப்பானும் பெயரிடும் நிறுவனங்களுக்கு 85 வீத பங்குகளை 35 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கு எடுத்த தீர்மானத்தை ஏற்க முடியாது. ஆகவே இவ்விடயத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றோம் - என்றுள்ளது. (ப)

# இம்ரான் கானின் உரை இறுதி நேரத்தில் இரத்து

கொழும்பு, பெப்.18

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை இறுதி நேரத்தில் அரசு இரத்துச் செய்துள்ளது.

இரு நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வரவுள்ளார். பாகிஸ்தான் தூதரகம் ஊடாக இலங்கை நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் உரையாற்றுவது குறித்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமரின் நாடாளுமன்ற உரை இடம்பெறாது என நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஷான் விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த போது நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

ஈஸ்டர் தாக்குதல்

# அறிக்கை பிரதிகள் தயாரானதும் விசேட அமைச்சரவைக் கூட்டம்

*அமைச்சரவை இணைப் பேச்சாளர் தெரிவிப்பு*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் பிரதிகள் தயாரிக்கப்பட்ட பின்னர் உடனடியாக விசேட அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதியொருவருக்கு ஆணைக்குழுவொன்று அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்தில் முதலில் அமைச்சரவைக்கும், அதன்பின்னர் நாடாளுமன்றத்துக்கும் அது சமர்ப்பிக்கப்படும். பிறகு ஏனையோருக்கு வழங்கப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை இரு வாரங்களுக்கு முன்னரே கையளிக்கப்பட்டது. அது பெரியதொரு அறிக்கையாகும். அமைச்சரவையில் 27 பேர் அங்கம் வகிக்கின்றோம். தற்போது எமக்கான பிரதிகள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. அவை தயாரிக்கப்பட்ட பின்னர் விசேட அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்படும். பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சட்டமா அதிபருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையின் பிரதிகள் வழங்கப்படும் - என்றார். (வ-44)

# ஐ.தே.க.வினர் கலந்துரையாடல்

கொழும்பு, பெப்.18

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் எவ்வாறு சக்திமிக்கதாக மாற்றுவது என்பது குறித்தும் மலையகப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை கட்சிக்குள் உள்வாங்குவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தற்கொலைக்குண்டுத் தாக்குதல் மீண்டும் இடம்பெற வாய்ப்பாம்!

## பொதுபல சேனா பரபரப்புத் தகவல்

கொழும்பு, பெப்.18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பலர் வெளியில் இருக்கின்றனர். எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற தாக்குதல் நடக்கலாம் என பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, எங்களைக் குற்றவாளியாக்கியுள்ளது. எம்மை குற்றவாளியாக்க, நாம் என்ன தவறிழைத்தோம். விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, இவ்வாறு மோசமாக இருக்குமென நான் நினைக்கவில்லை. இந்தத் தாக்குதலுக்குப் பின்னர், இப்போது நிறைய வீரர்கள் உருவாகியுள்ளனர். இவ்வாறான தாக்குதல் நாளையும் நடக்கலாம். ஏனெனில், இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய பலர் வெளியில் இருக்கின்றனர். வரவிருக்கும் பேரழிவிலிருந்து முழுநாட்டையும் பாதுகாக்க பொதுபலசேனா பல திட்டங்களைச் செயற்படுத்தியது. எனினும், தற்போது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று நடந்துள்ளது - என்றார். (ப)

# பாதிரியார்கள் தொடர்பான பேராயரின் கருத்தில் தவறு

## *பாதிரியார் ரோஹன் டி.எஸ். ஏக்கநாயக்க கவலை*

கொழும்பு, பெப். 18

இலங்கையின் பூர்வீக தேவாலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் தேசிய கிறிஸ்தவ பாதிரியார்கள், தொடர்பாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளியிட்டுள்ள கருத்து ஆழ்ந்த வருத்தமளிக்கிறது என்று இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலாளர் பாதிரியார் ரோஹன் டி எஸ் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பேராயர் மல்கம் ரஞ்சித் அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

குறிப்பாக சில மதத் தலைவர்கள் கிறிஸ்தவர்களை வன்முறையில் தாக்குமாறு தங்கள் ஆதரவாளர்களை அழைக்கும் நேரத்தில், பேராயர் போன்றவர்களின் அறிக்கைகள், எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் செயற்பாடாக அமைகின்றது - என்றார். (ஐ)

# குமாரதுங்க இருந்திருந்தால் கடலில் குதித்திருப்பார்

## *நாட்டின் ஆட்சி தொடர்பில் சந்திரிகா கருத்து*

விஜயகுமாரதுங்க உயிருடன் இருந்திருந்தால், நாடு இன்று ஆட்சி செய்யப்படும் நிலையைப் பார்த்து கடலில் குதித்திருப்பார் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விஜயகுமாரதுங்கவின் 33 ஆவது நினைவு நாள் நிகழ்வில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

விஜயகுமாரதுங்க எதிர்பார்த்த நிலையை நாடு இன்று அடைந்துவிட்டதா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த சந்திரிகா, இதற்கு பதிலளிப்பதைவிட, சிரிக்கவே முடியும் என்று தெரிவித்தார்.

அபிவிருத்தி செய்யப்படும்போது நாட்டை சிலர் நாசமாக்கி விடுகின்றனர். எனவே அரசியலில் புதிய இளம் தலைமைகள் அவசியம்.

நாட்டை ஆட்சி செய்பவர்களுக்கு வெளிநாட்டு உறவுகள் குறித்த சரியான அறிவு இல்லை. இந்த நிலையில், நாடு இன்று சீனாவின் குடியேற்ற நாடாக மாறிவிட்டது என்று சந்திரிகா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-இ)

# நாடு திரும்பிய 16பேருக்கு திரிபடைந்த வைரஸ்

கொழும்பு, பெப்.18

திரிபடைந்த புதிய கொரோனாத் தொற்றால் இலங்கையில் 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சைப்ரஸ், டுபாய் மற்றும் ஜோர்தானில் இருந்து நாடு திரும்பியவர்களுக்கே இவ்வாறு இந்தப் புதிய தொற்று கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பி.சி.ஆர். சோதனைக்கு மறுத்த பெண் கொரோனாவால் சாவு

கொழும்பு, பெப்.18

கம்பளை, கஹப்பிட்டிய தேவராஜ மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.



கம்பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மூன்று தடவைகள் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டபோதும், அதை ஏற்க மறுத்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கொவிட் தொற்றுக்குள்ளாகி தெல்தெனிய சிகிச்சை நிலையத்தின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். கம்பளை நகர சபைக்குட்பட்ட பகுதியில் பதிவான முதல் கொவிட் மரணம் இதுவாகும். (ப)

# புதிய வைரஸ் ஆபத்தானது பயணங்களைத் தவிருங்கள்

## கொழும்பு மக்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, பெப்.18

புதிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவக்கூடியது. எனவே தேவையற்ற பயணங்களை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவர் ருவன் விஜேமுனி அறிவித்துள்ளார்.

திருமண நிகழ்வுகள், பிறந்தநாள் விழாக்கள், இரவு விடுதி களியாட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும். மேலும் மக்கள் நெரிசலான இடங்களிலிருந்து முடிந்தவரை விலகி இருக்க வேண்டும்.

இவ்வாறு செயற்படாத பட்சத்தில் கொழும்பு நகரத்தில் புதிய கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்றும் அவர் எச்சரித்துள்ளார். (கு-இ)

# சபாநாயகருக்கு தடுப்பூசி

கொழும்பு, பெப்.18

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு இராணுவ மருத்துவமனையில் நேற்றைய தினம் அவர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டார். (வ-இ)

# தடுப்பூசி ஏற்றுவதற்கு அச்சப்பட வேண்டாம்

## சுகாதார அமைச்சு மீண்டும் ஆலோசனை

கொரோனாத் தொற்றைத் தடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள அனைவரும், எந்தவித அச்சமும் இன்றி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

தற்பொழுது பயன்படுத்தப்படும் தடுப்பூசியால் பாதிப்பு ஏற்படுகின்றது என்று சமூக ஊடகங்களில் வெளிவரும் தகவல்களால் அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். மக்களில் பெருமளவிலானோர் இந்தத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டால் தான் கொரோனாத் தடுப்புக்கான எமது திட்டத்தை வெற்றிக்கொள்ள முடியும். சிலர் இந்தத் திட்டத்துக்கு எதிராக தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்னெடுப்பதைக் கவனத்தில் கொண்டுள்ளோம்.

தடுப்பூசியால் பக்கவிளைவுகள் பெருமளவில் ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றப்பட்டோரில் எவராவது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்ற தகவல்கள் எதுவும் இல்லை. பொதுவாக இவ்வாறான தடுப்பூசி ஏற்றும்போது சிறிய அளவிலான பக்கவிளைவு ஏற்படக்கூடும். இது வழமையான ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு-இ)

# ரியசக்வலவிடமிருந்தான முச்சக்கரவண்டிகளுக்கு சான்றிதழ் வழங்கும் DPMC

ரியசக்வல
RIYASAKWALA

புதிய வாகனங்களுக்கான தட்டுப்பாடு காணப்படுவதால் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் கவனம் குவிந்துள்ளது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் பதிவுசெய்யப்பட்ட வாகன விற்பனை நிறுவனமான ரியசக்வல, பதிவுசெய்யப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்ய, விற்பனை செய்ய அல்லது பரிமாறிக் கொள்ள சிறந்த இடமாக விளங்குகிறது. மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி அல்லது ஏனைய வாகனங்கள் மற்றும் சகல வகையான வாகனங்கள் என பரந்துபட்ட வாகனத் தேவையை ரியசக்வல பூர்த்திசெய்கிறது.

பாரிய வாகனத் தீர்வுகளை வழங்கும் ரியசக்வல தனது பிந்திய முயற்சியாக DPMC இனால் சான்றிதழ் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இந்த முச்சக்கர வண்டிகள் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிபுணர்களால் மேற்பார்வைசெய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன், மூன்று தசாப்தங்களாக பஜாஜ் உற்பத்திகளுக்கு தனித்துவமான விநியோகஸ்தர்களாகக் காணப்படும் அவர்களின் மதிப்பீட்டுக்கான ஒப்பம் வழங்கப்படும்.

ரியசக்வலவிடமிருந்து DPMC சான்றிதழ் படுத்திய முச்சக்கர வண்டிகளை அல்லது ஏனைய வாகனங்களை ஏன் ஒருவர் கொள்வனவு செய்ய வேண்டும் என விளக்கமளித்த டேவிட் பீரிஸ் ஓட்டோமொபைல்ஸ் (பிரைவேற்) லிமிட்டட் நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு.நளிந்த குருகுலசூரிய கூறுகையில், "பதிவுசெய்யப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருடைய மனதிலும் தாம் கொள்வனவு செய்யும் வாகனத்தின் நிலைப்புத் தன்மை மற்றும் தாம் கொடுக்கும் பணத்துக்குப் பெறுமதி உள்ளதா என்ற சந்தேகம் காணப்படும். இடையில் மாற்றம் செய்யப்பட்ட வாகனங்கள் எதனையும் நாம் வழங்குவதில்லையென்பதை 'ரியசக்வல' வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது. வாகனங்களின் அவசர விற்பனைக்காக அவை குழப்பமான முறையில் அலங்கரிக்கப்படுவதில்லை என்பதால், ரியசக்வலவின் மதிப்பீடு தனித்துவமானதாகும். குறிப்பிட்ட காலப் பகுதியிலேயே அலங்காரம் செய்கின்றோம். மிகவும் வெளிப்படையான முறையிலேயே நாம் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான பெறுமதியை வழங்குகின்றோம். இறுதி உற்பத்தி சிறந்த தரத்துடன் காணப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்குப் பொறுப்பானதாக அவை அமையும்" என்றார்.

வெளிப்படையான மற்றும் நியாயமான மதிப்பீட்டு செயல்முறையின் மூலம், வாகன விதிமுறைகள் மற்றும் தரநிலைகளின்படி வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு மதிப்பிடப்படுவது உறுதி செய்யப்படுகின்றன. ரியசக்வல அதன் கடுமையான மதிப்பீட்டு செயல்முறை மற்றும் விற்பனையாளர்கள் மற்றும் வாங்குபவர்களுக்கு நியாயமான மதிப்பு ஆகியவற்றிற்காக சந்தையில் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்கே ரியாசக்வல எப்பொழுதும் முன்னுரிமையளிக்கிறது. பல்வேறு பின்னணியிலிருந்து வாடிக்கையாளர்களை அணுகவும், அவர்களின் தேவைகளை துல்லியமாக பூர்த்தி செய்வதற்காக அவர்களின் தேவையை முதலில் புரிந்து கொள்ளவும் அர்ப்பணிப்புள்ள அவர்களின் குழுவினால் முடிந்துள்ளது.

DPMCசான்றிதழ் அளிக்கப்பட்ட முச்சக்கரவண்டி அல்லது ஏனைய வாகனங்களை ரியசக்வலவிடமிருந்து கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டேவிட் பீரிஸ் குழுமத்தின் ஒரே கூரையின் கீழ் உள்ள லீசிங் நிறுவனமான அசெட்லைன் லீசிங் கம்பனி லிமிட்ட மற்றும் அசெட்லைன் இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து லீசிங் மற்றும் காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். சகல ரியசக்வல கிளைகளிலும் இவற்றுக்கான அலுவலகங்களும் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலுமுள்ள DPMC காட்சியறைகளில் ரியசக்வல அமைந்துள்ளது.

பதிவுசெய்த வாகனங்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் விற்பனை செய்வதை ரியசக்வல மிகவும் சௌகரியமாக்கியுள்ளது. இலக்கம் 137, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற எமது பிரதான காட்சியறைக்கு விஜயம் செய்து பதிவுசெய்யப்பட்ட சிறந்த வாகனத்தைப் பார்வையிட்டு போட்டியான விலையில் பெற்றுக்கொள்ள முடியும். DPMC சான்றிதழ் வழங்கப்பட்ட முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் அல்லது ஏனைய வாகனங்களை ரியசக்வலவிடமிருந்து கொள்வனவு செய்ய அல்லது மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0114700600 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



# பிரச்சினைகளைத் திசை திருப்ப பா.ஜ.க விவகாரத்தை எடுத்துள்ளனர்

## மனோகணேசன் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.18

**இந்தியாவின் திரிபுராவின் பாரதிய ஜனதாக் கட்சி (பா.ஜ.க) முதலமைச்சர் பிப்லப் டெப் நேபாளத்திலும், இலங்கையிலும், பா.ஜ.க கிளைகளை உருவாக்குவோம் என்று கூறினாராம் என இங்கே சிலர், மிகப்பெரிய தேசபக்தர்களைப் போன்று வேடம் புனைந்து வெறுமனே கூச்சல் போட்டு குழப்பிக் கொள்கிறார்கள். எமது நாட்டின் உண்மைப் பிரச்சினைகளால் மக்கள் துவண்டு போய் இருப்பதைத் திசைதிருப்ப இது இன்று பயன்படுத்தப்படுகிறது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது நாட்டிலும் இந்தியாவைப் பற்றி, வேறு நாடுகளைப் பற்றி, அந்தந்த நாட்டு அரசுகளைப் பற்றி, இந்த நாட்டு அரசியல்வாதிகள் பேசுவதில்லையா? இதை மறந்து, சாதாரண பாமரருக்கும் தெரிந்த விடயம் பற்றி, அரசியல் சட்ட விற்பன்னர்கள், ஊடகங்களில் வந்து, ஏதோ பெரிய அரசியல் சட்ட வியாக்கியானம் வேறு கொடுக்கின்றார்கள். இவை என்ன என எங்களுக்குத் தெரியாதா? இந்தியப் பிரதமர் மோடியின் தலைமையில் இந்த நாட்டில் கட்சி அமைக்க முடியாது. இந்திய பா.ஜ.கவின் நேரடிக் கிளையை இங்கே அமைக்க சட்டத்தில் இடமில்லை. ஆனால் இங்கே ஒரு கட்சியை வேண்டுமானால், சட்டப்படி "பாரதிய ஜனதா கட்சி" (பா.ஜ.க) என பதிவு செய்ய விண்ணபிக்கலாம். அல்லது உள்ள ஒரு கட்சியின் பெயரைக்கூட பிஜேபி என மாற்றிக்கொள்ளலாம். இங்கே ஹெல உறுமய, ருஹுனு ஜனதா, தமிழ் முற்போக்கு, தமிழ் தேசிய, முஸ்லிம் காங்கிரஸ் என பல கட்சிகள் உள்ளன. இவை போன்று இதுவும் அவசியமானால் அமையலாம். ஆக, இதெல்லாம் சின்னச் சின்ன அரசியல் நகர்வுகள்தான். பிப்லப் டெப், ஒரு துடிப்பான இளம் பா.ஜ.க அரசியல்வாதி, எதிர்கால இந்தியாவின் ஒரு முன்னணித் தலைவராக வரக்கூடியவர். தற்போது கொஞ்சம் அதிகமாகப் பேசி விட்டார், அவ்வளவுதான். இப்போ அவரை அழைத்து பிரதமர் மோடி விளக்கம் கேட்டுள்ளார். இதைப் பிடித்துக்கொண்டு இங்கே சிலர் தாம் பெரிய யோக்கியர்கள், உலக மகா உத்தமர்கள் போன்று பெரிய கட்டுக் கட்டுகிறார்கள் -என்றார். (ப)

# ஷானி அபேசேகரவின் மனு 23ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, பெப்.18

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப.பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோரால் பிணை திருத்தக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தத் திருத்தங்கள் அடங்கிய பிணை மனு எதிர்வரும் 23 ஆம் திகதி, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன கைது செய்யப்பட்ட வழக்கில், பொய் சாட்சியங்களை உருவாக்கினர் என்ற குற்றச்சாட்டில் ஷானி அபேசேகர உள்ளிட்ட இருவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களைப் பிணையில் விடுதலை செய்யக்கோரிய மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையிலேயே திருத்தங்கள் அடங்கிய பிணை மனுக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (வ-இ)

### இலங்கையில் பா. ஜ.க.

# அமித்ஷா அறிவித்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை

## உதய கம்மன்பில தெரிவிப்பு

இந்தியாவின் பாரதிய ஜனதாக்கட்சி இலங்கையிலும் நிறுவப்படும் என அக்கட்சியின் பிரதானி அமித்ஷா அறிவிப்பு விடுத்தார் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. எனவே, மூன்றாம் தரப்பால் கூறப்படும் கட்டுக்கதைகளுக்கு அரசின் உத்தியோகப்பூர்வ பதிலை வழங்கமுடியாது. இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாரதிய ஜனதாக்கட்சியின் தலைவர் அமித்ஷா அவ்வாறானதொரு அறிவிப்பை விடுத்தார் என்பதற்கு உரிய சாட்சியம் எதுவும் இல்லை. உணவருந்தும் வேளையில் அமித்ஷா அவ்வாறு கூறினார் என்று திரிபுரா முதலமைச்சர் தான் கருத்து வெளியிட்டுள்ளார். எனவே, அமித்ஷா கூறினார் என்பதற்கான அறிக்கையோ அல்லது காணொளியோ இல்லை. அத்துடன், இலங்கையில் அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு கட்சி ஆரம்பிக்கப்படுமா அல்லது இல்லையா என்பது குறித்து பாரதிய ஜனதாக்கட்சி இன்னும் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை. மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாக விடுக்கப்பட்ட அறிவிப்பே ஊடகங்களில் வெளிவந்துள்ளது. எது எப்படியிருந்தாலும் இந்த நாட்டிலுள்ள தேசப்பற்றுள்ள மக்கள், வெளிநாட்டுக் கட்சியொன்றுக்கு ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு இடமளிப்பார்கள் என நாம் நம்பவில்லை. அதேபோல இரட்டைப் பிரஜா உரிமை உடையவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு புதிய அரசமைப்பு ஊடாக தடைவிதிக்கப்படும். இது தொடர்பில் 10 கட்சிகளுக்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அத்துடன் அறிவிப்பு வெளியாகி இரு நாள்கள்தான் ஆகின்றன. முதல்வரின் கருத்தை அமித்ஷாவோ அல்லது பாரதிய ஜனதாக்கட்சியின் சார்பில் தெரிவாகியுள்ள பிரதமர் மோடியோ, வரவேற்றோ அல்லது நிராகரித்தோ கருத்து வெளியிட்டால் அப்போது அரசின் நிலைப்பாட்டை அறிவிக்க முடியும் -என்றார். (ப-44)

# இலங்கையில் கட்சி தொடங்க இந்தியாவுக்கும் அனுமதியில்லை

## நாலக கொடஹேவா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.18

எமது நாட்டில் அரசியல் கட்சி தொடங்க எந்தவொரு வெளிநாட்டினருக்கும் அனுமதி கிடையாது என கடலோரப் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியாவில் சில அரசியல்வாதிகள், தங்கள் உதவியாளர்களைப் பிரியப்படுத்த சில கதைகளைச் சொல்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப் படக்கூடாது. இந்த நாட்டின் இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் எதையும் அரசு ஒருபோதும் செய்யாது. இதேவேளை எங்கள் கட்சியிலோ அல்லது வேறு எந்தக் கட்சியிலோ உள்ள எவரும் தங்கள் கருத்தை வெளிப்படுத்த முடியும். ஜனநாயகம் என்பது இதுதான். யாராவது ஒரு கருத்தை வெளிப்படுத்தும்போது, அதை எங்கள் கட்சிக்கு காட்டிக் கொடுப்பதாக நாங்கள் கருதக்கூடாது. அந்தவகையில் எமது நாட்டில் ஒரு அரசியல் கட்சியை உருவாக்க, எந்தவொரு வெளிநாட்டினரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.- என்றார். (ப)

# நியாயமாக கூலியை வழங்க எவரும் தயாராக இல்லை

## வேலு குமார் எம்.பி தெரிவிப்பு

கண்டி, பெப். 18

தொழிலாளருக்கு நியாயமான கூலியைப் பெற்றுக்கொடுப்பதில் எவருக்கும் அக்கறை இல்லை என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூலி விடயம் இன்று இழுபறி நிலையை அடைந்துள்ளது. இவ்விடயத்தில் ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு திசையில் செயற்படுகின்றனர். பேச்சில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுக்கு தங்களைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. பேசுவது நாம் தான், கூலி நிர்ணய சபையில் இருப்பதும் நாம் தான், பெற்றுக்கொடுத்ததும் நாம் தான் என்பதன் மூலம் தங்களது தொழிற்சங்க, அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வது அவர்களது முன்னுரிமைத் தேவையாக உள்ளது. அரசின் முன்னுரிமை, கம்பனிகளைத் திருப்திப்படுத்துவதிலேயே உள்ளது. கம்பனிக் காரர்கள், தொழிற்சங்கத்தின் பலவீனம் மற்றும் அரசால் மறைமுகமாக வழங்கப்படும் ஒத்துழைப்பை சாதகமாக்கிக்கொண்டு தங்களது கரங்களைப் பலப்படுத்துகின்றனர். தொடர்ந்தும் தங்களது பிடியில் தொழிலாளர்களை அடக்கி வைத்துக்கொள்வதிலேயே அவர்கள் அக்கறை காட்டுகின்றனர். ஆக மொத்தத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் அரசியல் நாடகமே நடைபெறுகின்றது. தொழிலாளருக்கு நியாயமான கூலியைப் பெற்றுக்கொடுக்கும் அக்கறை எத்தரப்புக்கும் இல்லை. கூட்டு ஒப்பந்தமா? கூலி நிர்ணய சபையா? இறுதி கூலித் தொகை என்ன என்பதில் இழுபறி நிலை தொடர்ந்தால் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். எனவே காலம்தாழ்த்தாது இந்த விடயத்தில் ஒரு முடிவுக்குவர வேண்டும் -என்றார். (ப)




## யாழ். மாநகர சபை களஞ்சிய அறையில்
## தேவைக்கு அதிகமாக பொருள்கள்

யாழ்.மாநகர சபை களஞ்சிய அறையில் பல பொருள்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு காலாவதியாகி உள்ளன. தேவைக்கதிகமாகப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்று மாநகர சபை உறுப்பினர் கிருபாகரன் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த மாநகர முதல்வர், காலாவதியாகும் தறுவாயில் காணப்படும் பொருள்களை உடனடியாகப் பயன்படுத்தலாம். அது தொடர்பான அறிக்கைகளை உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

பூங்காவில் உலோகப் பொருள்களுக்கு வர்ணம் பூச கடந்த காலத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேலைகள் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை என்று கிருபாகரனால் தெரிவிக்கப்பட்டது. பதிலளித்த முதல்வர், உடனடியாக ஒப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், காலவதித்திகதி அண்மித்த பொருள்களை மாநகரசபைப் பாவனைக்கு கொள்வனவு செய்வதைத் தவிர்ப்பதுடன் அதனை மாநகர பொறியிலாளர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (சு-319,320)

# தமிழுக்கு முன்னுரிமையளித்தால் வியாபாரிகளுக்கு 50% கழிவு

## யாழ். மாநகர சபை அதிரடித் தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.18

**புதிதாக வியாபார நிலையங்களை ஆரம்பிப்போர் தமிழ் மொழியில் வியாபார விளம்பரப் பதாகைகளை அமைப்பின் 50 வீதம் வியாபாரக் கழிவு வழங்கப் படும். இவ்வாறானதொரு தீர்மானம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

யாழ்.மாநகர சபையின் அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பல விடயங்கள் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டன. அதில் இந்தக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. புதிதாக வியாபார நிலையங்களை ஆரம்பிப்போர் தமிழ் மொழியில் வியாபார விளம்பரப் பதாகைகளை அமைப்பின் 50 வீதம் வியாபாரக் கழிவு வழங்கப்படும். ஏற்கனவே வேறு மொழிகளில் விளம்பரப் பதாகைகளை வைத்திருப்பின், அவர்கள் தாமாகவே முன்வந்து மாற்றுவார்களெனில், அவர்களுக்கும் 50 வீத வியாபாரக் கழிவு வழங்கப்படும் எனவும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வியாபாரக் கழிவு ஒரு வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-319,320)

தமிழர் தேசத்தில்

# அரச விசுவாசிகள் மண் கவ்வுவார்கள்

## சாணக்கியன் எம்.பி. நம்பிக்கை

மட்டக்களப்பு, பெப். 18

தற்போது ஒரு தேர்தல் நடந்தால் வடக்கு கிழக்கில் அரசுடன் இணைந்து செயற்படும் எவரும் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமை இருக்காது என்றே நினைக்கின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டமானது வரலாறு காணாத வெற்றியைக் கண்டது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தினூடாக அரசியல் என்பதை விட தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றோம். என்றுதான் முக்கியமான விடயம்.

இதனை விரும்பாதவர்கள்தான் மிகவும் கேவலமான செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள். மக்களிடம் எழுச்சி ஒன்று ஏற்பட்டால், தங்களுடைய பொய்கள் அடங்கிப் போகும், அரச கைக்கூலிகளின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்படும் என்ற அச்சமே அவர்களை இவ்வாறு செய்ய வைக்கின்றது. இதனை இலக்காகக் கொண்டு நாங்கள் செயற்படவில்லை.

ஆனால், தற்போது ஒரு தேர்தல் நடந்தால் வடக்கு கிழக்கிலே அரசோடு இருக்கின்ற எவரும் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமை இருக்காது என்றே நினைக்கின்றேன் -என்றார். (ப)

# யாழ். நகரப்பகுதிக்குள் வள்ளுவருக்குச் சிலை

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் பிரதான தபாலகத்துக்கு முன்னால் உள்ள சுற்று வட்டத்தில் வள்ளுவர் சிலையை நிறுவுவதற்கு, யாழ் மாநகர சபை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்.மாநகர சபையின் அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வள்ளுவர் சிலை நீதிமன்ற கட்டடத்தொகுதியில் வைப்பதற்கு ஏற்கனவே சபையில் முடிவு எடுக்கப்பட்டது. எனினும் நீதிமன்றச் சட்டங்களின் பிரகாரம் நீதிமன்ற வளாகங்களுக்குள் சிலை வைக்க சட்டத்தில் இடமில்லை என்ற அடிப்படையில் யாழ் நூலக வீதி, யாழ்ப்பாணம் நீதிமன்ற வீதி , யாழ்.மத்திய கல்லூரி வீதி என்பவை சந்திக்கும் சந்திப்பகுதியில் சிலை வைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதன்பின்னர் குறித்த சிலை பராமரிப்பின்றி யாழ்.பொதுநூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று சபை உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது குறுக்கிட்ட மாநகர முதல்வர் மணிவண்ணன், திருவள்ளுவர் காலத்தால் முந்திய தமிழ்ப்புலவர். அவரை கௌரவப்படுத்த வேண்டிய தேவை யாழ்ப்பாண மக்களுக்கு உள்ளது. எனவே இதில் எவருக்கும் ஆட்சேபனை இல்லை என்றால், யாழ்.தபாலகத்துக்கு அருகில் உள்ள பிரதான சுற்றுவட்ட மையத்தில் சிலை நிறுவலாம் என்ற யோசனையை முன்வைத்தார். இதற்கு எவரும் எதிர்ப்பும் தெரிவிக்காத காரணத்தால் குறித்த தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. (சு-

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1958



மறைவு 17 . 02 . 2021

### லயன் கதிரவேல் கமலேஸ்வரன்

(ஓய்வு நிலை பிரதம கணக்காளர்)

துன்னாலையைப் பிறப்பிடமாக கொண்ட அல்வாயூர் லயன் கதிரவேல் கமலேஸ்வரன் அவர்கள் நேற்று (17.02.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் தவமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தப்பு பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் அன்புக் கணவரும், பிறேம் கமல் சந்தர் (யாழ் / பரி யோவான் கல்லூரி, உயிரியல் பிரிவு உயர்தரம்) அவர்களின் பாசமிகு தந்தையாரும், பா.கமலேஸ்வரி, B.தவனேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை), B.மகேஸ்வரன் (யா/சென் யேம்ஸ் மகளீர் கல்லூரி, ஆசிரியர்), ச.ரேவதி, க.சிவனேஸ்வரன் (சுவிஸ்), அமரர் க. கவந்தீசன், அவர்களின் பாசமிகு சகோதரரும், அமரர் க. பாலசந்திரன் (UK), மற்றும் க. சந்திரமாலா, அமரர் பிறேமச்சந்திரன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சந்திரமகால், வதிரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்பில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 379 6175**

## மரண அறிவித்தல்

மலர்வு 04 09 1950



உதிர்வு 16 02 2021

### அமரர். கிருபரட்ணம் பத்மாதேவி

யாழ்ப்பாணம் சங்கானையை பிறப்பிடமாகவும் கொழும்பு No.124, W.A.Silva Mawathaயை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கிருபரட்ணத்தின் அன்பு மனைவியும். காலம் சென்ற சபாரட்ணம் நல்லம்மாவின் அன்பு மகளும் தம்பிஐயா ஆகியோரின் மருமகளும். நாகேந்திரம் (கிளிநொச்சி). நாகராசா (வவுனியா). தெய்வேந்திரம் (இந்தியா). ஆகியோரின் அன்பு சகோதரியும் இந்திராணி. பராசக்தி நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் பராசக்தி (மல்லாகம்). பரமகுருநாதன் (கொழும்பு Every Day Bakery,. காங்கேயன் வெதுப்பகம் (மல்லாகம்) உரிமையாளர்) பரமநாதன் (லண்டன்). காலம் சென்ற பாலவிஷியா ஆகியோரின் அன்பு தாயாரும். மோகனசுந்தரம். சோபனா. சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும். சோதீபன். பவித்திரா. மதுஜன். யதுசன். லோசியன். வர்ஷினி. லக்சான். தனுஷா. ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் சஸ்னிகாவின். பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2021 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

தொடர்புகளுக்கு: 0773686129
0765521122

தகவல்:
மகன் - பரமகுருநாதன் (Bakery உரிமையாளர்)


## ரூ.10 கோடி பெறுமதியான போதை மீட்பு

கொழும்பு, பெப்.18

நுகேகொட - கங்கொடவில பகுதியில் 10 கோடி ரூபா வுக்கு மேல் பெறுமதியுடைய ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பு திட்டமிட்ட குற்றச்செயல்கள் தடுப்புப் பிரிவினரால் நுகேகொடவில் அமைந்துள்ள விருந்தினர் இல்லமொன்றில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே 5 கிலோகிராம் ஹெரோய்ன் மற்றும் 5 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

(ச-இ)

## மரண அறிவித்தல்



### திரு.கந்தையா பாலசுப்பிரமணியம்

யாழ் மடத்தடி, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், தும்பளை தங்காலய வீதி, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.02.2021) புதன்கிழமை இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பசுபதி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் செல்வரத்தினம் தம்பதிகளின் மருமகனும், பத்மாசினி அவர்களின் அன்புக் கணவரும், கேமமாலா, மயூரன் (NETHERLAND), ஜெனராஜ் (LONDON) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற இராசரத்தினம், பாலசுந்தரம், செல்வராஜா, சொர்ணமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரதிலீபன், பிருந்தா, கீர்த்தனபிரியா ஆகியோரின் அன்பு மாமாவும், அக்ஷயா, பூமிஜா, விகாசன், ரிதேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தங்காலய வீதி, தும்பளை இல்லத்தில் இன்று (18.02.2021) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பித்து மாலை 4.00 மணியளவில் தும்பளை கடற்கரை இந்து சோழயம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேமா: 077 354 2722**
**திலீபன்: 077 320 9568**
**மயூரன்: 0031 640 248831**
**ஜெனா: 0044 7455025553**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை சங்கரப்பிள்ளை

காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சங்கரப்பிள்ளை (நெடுங்கேணி துரை மோட்டார்ஸ் உரிமையாளர்) நேற்று (17.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், அமரர் அருணாசலம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், அமரர் செல்லம்மா, அமரர் நாகம்மா, நேசமலர் மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணதேவி (கனடா), நிர்மலாதேவி (கனடா), சகுந்தலாதேவி (பண்டாரவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரம்மஸ்ரீ (கனடா), சிவராசகுமார் (கனடா), சூரியகுமார் (பண்டாரவளை) ஆகியோரின் மாமனாரும், நிதர்சன், நம்மியா, கஜன், ஜனனி, கஜனி, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (21.02.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் (காரைநகர் புதுறோட்டில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுறோட், காரைநகர்.**
**மனைவி: 077 339 7990**
**கிருஷ்ணதேவி (மகள்) 416 509 1986**
**நிர்மலாதேவி (மகள்) 416 798 2051**
**சகுந்தலாதேவி (மகள்) 077 654 0734**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# துறைமுக மேற்குமுனையத்துக்கு முதலீட்டாளர்களைப் பெயரிடுக

## இந்தியா, ஜப்பானுக்கு இலங்கை அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 18

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தியிலிருந்து ஜப்பான் மற்றும் இந்தியா வெளியேற்றப்பட்டிருந்த நிலையில், துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தியை அந்த இரு நாடுகளிடமும் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



அதற்கு அமைவாக, அந்த முனைய அபிவிருத்திப் பணிக்கான முதலீட்டாளர்களைப் பெயரிடுமாறு கோரப்பட்டுள்ளது.

கொழும்பு மேற்குத் துறைமுக முனையம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு நேற்றுமுன்தினம் முதல் தடவையாகக் கூடி அது குறித்து ஆராய்ந்துள்ளது. இதனை அந்தக் குழுவின் தலைவரும் துறைமுகங்கள் அமைச்சின் செயலருமான யூ.டி.சி.ஜயலால் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய மற்றும் ஜப்பான் தூதரகம் ஆகியனவற்றுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ.இ)



## எம்.பிக்களுக்கு தடுப்பூசி வழங்குதல் ஆரம்பம்

கொழும்பு, பெப்.18

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியவிலுள்ள இராணுவ மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என கொவிட் கட்டுப்பாடு மற்றும் ஆரம்ப சுகாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (வ-இ)

## வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர் ஊடாக நாட்டுக்கு வருமானம்

கொழும்பு,பெப்.18

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் ஊடாக கடந்த வருடம் நாட்டுக்கு 7 ஆயிரத்து 104 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.8 வீத அதிகரிப்பை காட்டுகின்றது என்று மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்றுலாத்துறையின் ஊடாக கடந்த வருடத்தில் 957 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# கொரோனாச் சட்டம் ஜனாதிபதிக்கு இல்லையா?

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி கேள்வி

**கொழும்பு, பெப்.18**

**ஜனாதிபதிக்கு கொரோனா விதிகளைப் பின்பற்றும் விடயத்தில் எந்த நடைமுறைகளும் இல்லையா? சாதாரண மக்களுக்கு அவர்களுடைய நிகழ்வுகளுக்கு மட்டும் தான் இந்தச் சட்டமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடமும் மூன்று மாதங்களும் நிறைவடைகின்றன. கொரோனா பிரச்சினையால் வருவாய் இழந்த மக்களுக்கு நிவாரணங்களைக் கூட முறையாகக் கொடுக்க முடியாத நிலைக்கு கட்சியாளர்கள் இந்த ஆட்சியைக் கொண்டு வந்துள்ளனர்.

கொரோனா மரணங்களையும் தொற்றாளர் எண்ணிக்கைகளையும் அரசு தொடர்ந்தும் மறைத்து வருகின்றது. இவ்வாறான ஒரு நாட்டில் எம்மால் முன்நோக்கி செல்ல முடியாது. உண்மைகளைத் தெரியப்படுத்துங்கள். புள்ளி விவரங்களை மறைப்பது தொடர்பாக குறிப்பிட்ட துறை சார்ந்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் மருத்துவ ஆய்வு கூட அதிகாரிகள் சங்கம் என்பவை கூடத் தெரிவிக்கின்றன. ஜனாதிபதிக்கு கொரோனாச் சட்டங்களைப் பின்பற்ற எந்த நடைமுறைகளும் இல்லை. சாதாரண மக்களுக்கு அவர்களுடைய நிகழ்வுகளுக்கு மட்டும் தான் இந்தச் சட்டம் - என்றார். (ப)

## விமான கட்டணத்துக்கு சலுகைக் காலம் நீடிப்பு!

கொழும்பு, பெப்.18

விமான சேவை நிறுவனங்களின் விமானங்களைத் தரையிறக்கல் மற்றும் தரித்து நிற்பதற்கான கட்டணங்களுக்கான சலுகைக் காலத்தை நீடிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அதன்படி, சுற்றுலாத் துறை அமைச்சு மற்றும் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டுள்ள விசேட நேர அட்டவணைக்கமையவே சலுகைக்கால நீடிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சர்வதேச விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கு மேற்கொள்ளும் விமான சேவைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சலுகைக் காலம் நீடிக்கப்படவுள்ளது. (ற-இ)

## கட்சி தாவும் படலத்தை ஆரம்பிக்க வேண்டாம்

*எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு*


கொழும்பு,பெப்.18



“ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்போது மன்னிப்புக் கேட்பது சரியான செயற்பாடு அல்ல. முஸ்லிம் சமூகத்திலிருந்து வாக்குகளைப் பெற்று வெற்றி அடைந்துவிட்டு கட்சி தாவும் படலத்தை ஆரம்பிக்க வேண்டாம்” என ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனாவையும் 20ஆவது திருத்தத்தையும் ஒன்றாகக் குழப்பிக் கொள்ள வேண்டாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்டி ஏகாதிபத்தியம் நாட்டில் முன்நோக்கி வருகிறது. அதற்கு அனுமதித்துவிட்டு இப்போது மன்னிப்புக் கேட்பது என்பது மீண்டும் மக்களை ஏமாற்றும் செயல். கொரோனா இறப்பு என்பது வேறு, 20 ஆவது திருத்தம் என்பது வேறு. 20 ஆவது திருத்தம் கொள்கை ரீதியானது. அடுத்த விடயம், கட்சியின் தலைவர்கள் இரண்டு பேரும் ஐக்கிய மக்கள் சக்தியோடு இருந்து கொண்டு ஏனையவர்களை ஆதரவாக வாக்களிக்க அனுமதித்துள்ளார்கள். இது என்ன விளையாட்டு? இதனை நாட்டு மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒரு போதும் மன்னிக்கப் போவதில்லை. காரணம் பல கட்ட கலந்துரையாடல்களில் பங்கேற்று எங்களுக்கு உறுதியளித்துவிட்டு இறுதி நேரத்தில்தான் இவர்கள் கட்சி தாவினர்கள். என்றார். (ஐ-இ)



# உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரிகள் பற்றாக்குறை!

## நிவர்த்தி செய்யுமாறு பிரதமர் கோரிக்கை

கொழும்பு, பெப்.18

உள்ளூராட்சி மன்றங்களில் மதிப்பீட்டு அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

மேலும், மாநகர சபைகள், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை விரைவுபடுத்த வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இதற்கமைய இந்தத் திருத்தங்களை மேற்கொள்ளத் தயாராகவுள்ளேன் எனவும், அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஒரு சில தினங்களில் சமர்ப்பிப்பேன் எனவும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் உறுதியளித்தார்.

இதற்கமைய மார்ச் 1 ஆம் திகதி முதல் எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்துவது தொடர்பான உத்தியோகபூர்வ கூட்டங்களுக்கு உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜீ.கே.ரணவீர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளைத் திட்டமிடும்போது பொது மக்களை அசௌகரியங்களுக்கு உட்படாத வகையில் அவர்களின் வசதிக்கேற்ப அதனை திட்டமிடுமாறு அனைத்து உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கும் பிரதமர் அறிவித்தார். (ற-இ)

## இயங்கி வரும் கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் விளையாட்டு உபகரண (Sports Goods) வியாபார நிலையம் வியாபார பொருட்கள் மற்றும் தளபடங் களும் விற்பனைக்கு உண்டு.

வாடகை ஒப்பந்தம் புதுப்பித்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 076 122 6602
Viber & Whatsup: 076 122 6602



## சேவை

அழகிய வீடொன்றை உங்கள் எண்ணத்திற்கேற்ப கட்ட வேண்டுமா?
அல்லது
உங்களது வீட்டில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமா?

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
077 6644 832, 077 835 4055


## மரண அறிவித்தல்



பிறப்பு 17 • 07 • 1929

இறப்பு 15 • 02 • 2021

### மகாலிங்கம் சரஸ்வதி

கந்தர்மடம் பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை மாங்கொல்லை, தற்சமயம் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சரஸ்வதி அவர்கள் கடந்த (15.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா மகாலிங்கத்தின் (K.K.S மாங்கொல்லை) அன்பு மனைவியும், சின்னத்தம்பி-சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், திருமதி சுப்பிரமணியம்-நாகம்மா, சின்னத்தம்பி-பரமலிங்கம் ஆகியோரின் சகோதரியும், இராஜகுலதேவி, இராஜகுல தேவன், குமாரகுலதேவன், சிறீகுலதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் தேவபாலன், மஞ்சுளா, சுதர்சினி, றோலணதேவி ஆகியோரின் மாமியாரும், முகுந்தன், துளசா, வைதிகன், சமித்திரா, கோபிநாத், தட்சாயினி, ராம்நாத், மோகீசன், தேவகீசன், யேறுசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிலியன், நோவா, கனிஷா, எலோயிஸ்நிலா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.02.2021 புதன்கிழமை கனடாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: அரியரத்தினம்
ஜெயரத்தினம்
பவா, குஞ்சன்

## மேலும் 13 பேர் சாவு: கொரோனா காவு 422

கொழும்பு, பெப். 18

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 422ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, நேற்றும் 713 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-22)


## விற்பனைக்குண்டு

மூன்று கிழமையான ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு (கழுத்து வெட்டியும்)

தொடர்பு 077 477 5603



## வேலை வாய்ப்பு

பருத்தித்துறை கற்கோவளத்தில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு (பெண்) கணக்காளர் (Accountant) தேவை
கணினி அறிவு விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 500 6769



NVQ DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.P25/0056
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை
ICT - NVQ LEVEL- 5
Diploma in Information Technology [Full Time - 1 Year]
NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில் குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.
பதிவுகளை பெப்ரவரி 20 ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 22/2/2021 (Mon) 8.30 am
Call now 0777173517
ICT - NVQ LEVEL - 4 [Full Time - 6 Months]
CAA - NVQ LEVEL - 3 [Full Time - 3 Months, Part Time - 6 Months]
DMI COMPUTER EDUCATION
No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655
0777240707


## கரவெட்டி இளைஞன் மாலைதீவு கடலில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 18

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த இளைஞன், மன்னார் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்றிருந்தநிலையில், படகு விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது சடலம் மாலைதீவு கடலில் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

14 நாள்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கரவெட்டி ஸ்ரீ நாரதர் பகுதியைச் சேர்ந்த செல்வராசா ஜெயராம் (வயது22) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அந்த இளைஞர் மேசன் வேலை மற்றும் கூலிவேலைகள் செய்துவந்துள்ளார். இந்தநிலையில் மன்னாருக்கு தொழிலுக்குச் சென்றிருந்த போது சம்பவம் இடம்பெற்றுள்ளது. (கு-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 • 09 • 1943

மறைவு 17 • 02 • 2021

### திருமதி சின்னத்தம்பி பாக்கியம்


நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 65/4, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாக்கியம் நேற்று (17.02.2021) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னர்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னர் சின்னதம்பியின் (ஓய்வுபெற்ற நகரசபை மின்னிணைப்பாளர், சாவகச்சேரி) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரன், மற்றும் புஸ்பலதா ஆகியோரினதும் விமலேஸ்வரன் (சுவிஸ்), பிரதீபன் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), விஜிதா, பிரகாசன் (பிரதிப் பரீட்சை ஆணையாளர், இசுறுபாய, கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அன்னபூபதி, கிருபானந்தம் மற்றும் சாந்தாதேவி, பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மார்க்கண்டு (ஓய்வூதியர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), நடராஜா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர், நாவற்குழி), றூபவதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற செல்லத்துரை, செல்லம்மா, அப்பையா, சண்முகம்,மற்றும் சின்னராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், றதிசா (சுவிஸ்), சிவனேஸ்வரன் (உரிமையாளர், வீடியோ ஏஞ்சல்), வசந்தகுமாரி, தட்சிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், விகாஸ் (சுவிஸ்), பிரசோபன் (ஜேர்மனி), பிரவக்ஷன், டிவக்ஷனா, பிரணவன், நிகேதன், ஷப்தவி, லஸ்னிகா, கிருஸ்திகா, திஸ்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் மருதடி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை காந்தாளம்பிட்டி (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி) இந்து மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சி.பிரதீபன் (மகன்) 077 344 6035
சி.பிரகாசன் (மகன்) 077 399 1585

## மரண அறிவித்தல்



### நாராயணசுவாமி மோகனதாஸ்

மாவடி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் தற்போது வட்டுத் தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணசுவாமி மோகனதாஸ் அவர்கள் 16.02.2021 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணசுவாமி மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியரின் மருமகனும் திருமகளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மனோகரிதேவி (Retired Teacher of Holy Family Convent, Dehiwela), மகேந்திரன் (Retired Teacher), சிறீதரன் (Retired Agriculture Instructor), மனோமகமணி மற்றும் மனோரஞ்சிதமலர் (Retired staff Nurse), மனோகரன் (சட்டத்தரணி-கொழும்பு), கலாநிதி இரத்தினவதனி (U.S.A) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பகீரதன் (திருகோணமலை), சுசீலா (நியூசிலாந்து), லலிதமனோகரி (Retired Teacher St. Bridget's convent, Colombo -07) கெங்காதரன் (U.S.A.) திருக்குமார், காலஞ்சென்ற கலைமகள் மற்றும் திருக்கேதீஸ்வரன் (அம்பகாம அ.த.க. பாடசாலை ) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலாநிதி ரமணன் (அவுஸ்திரேலியா), ஜீவனி (U.S.A), கலாவினன், கவினன், ஆதினன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வித்தியாவின் (நியூசிலாந்து) பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2021) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.34, கள்ளி வீதி,
வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்: மனைவி
மற்றும் குடும்பத்தினர்.

## அம்புலன்ஸ் சாரதிக்கு விண்ணப்பம் கோரல்

St John Sri Lanka

சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ் மாவட்ட அம்புலன்ஸ் சேவைக்கு சாரதிகள் தேவைப்படுகின்றது. இதற்காக விண்ணப்பிப்பவர்கள் பஸ் சாரதி அனுமதிப் பத்திரம் (A தரம்) வைத்திருத்தல் வேண்டும். இதற்கான நேர்முகப் பரீட்சை 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு 1ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம்பெறும். சேவை ஆற்ற விரும்புவர்கள் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். கொடுப்பனவுகள் நேரில் கலந்து தீர்மானிக்கப்படும்.

மாவட்ட தலைமையகம்,
இல 161, 1ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

செ.செல்வறஞ்ஜன் O.St.j
மாவட்ட ஆணையாளர் சென்.ஜோன். அம்புலன்ஸ்
யாழ் மாவட்டம்


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1952

மறைவு 12 . 02 . 2019



### அமரர் தம்பித்துரை பாலகிருஷ்ணன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவனே
ஆண்டுகள் இரண்டாகி விட்டாலும்
இன்று உங்கள் வழிகாட்டலே இவ்வுலகில்
எம்மை வாழ வைக்கின்றது.
என்றும் எமது வாழ்க்கைப் பயணத்திற்கு
தெய்வமாக விண்ணில் இருந்து
வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் வாழ்கிறோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### நாகமுத்து சுப்பிரமணியம்

கடந்த 19.01.2021 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்கள் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள் அனைவருக்கும் எமது பரிபூரணமான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று (18.02.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில்கிழக்கு,
கோண்டாவில்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கராசா பராசக்தி (மணி)

மண்கும்பான் 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் விதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா பராசக்தி நேற்று (17.02.2021) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா சிவகாமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதி தங்கராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, பாக்கியம், பரராசசிங்கம், இரத்தினம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ரவி, ரகு, ரவீந்திரன், ரவிச் சந்திரன், ரமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகனேஸ்வரி, லீலாவதி, காலஞ்சென்ற ரஞ்சினிதேவி மற்றும் ருக்குமணிதேவி, மனோரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரமேஸ், கௌசிகா, நிதியா, கீதா, பிரியா, நிஷா, செந்தூரன், தனுசாந்தி, சதீஸ், தர்சன், தர்சினி, டனோஜன், தினேஸ்வரன், தனேஸ்வரன், விதுஷன், லோஜன், டனுஜன், ரஜீவன், ரஜிசாந், புகழரசன், விசாளிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்கும்பான் சாட்டி (5ம் வட்டாரம்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29/5, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(077 618 3243)

## மரண அறிவித்தல்



### திருமதி பாலேஸ்வரி செல்வராஜா (BA/MA)

(யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, நைஜீரியா, U.S.A ஆகியவற்றில் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றி இளைப்பாறியவர்.)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாய், நைஜீரியா, U.S.A ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலேஸ்வரி செல்வராஜா அவர்கள் 15.02.2021 அன்று New York இல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு செல்வராஜா (இளைப்பாறிய ஆசிரியர் மற்றும் மஸ்கின்ஸ் நிறுவனத்தின் P.M) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லையா (சட்டத்தரணி) இராசமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு (நில அளவையாளர்) தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், மைதிலி, தயாபரன், மகிலா ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமநாதன், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபர்ணா, அபிமனின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், ரூபாவதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், வசந்தாதேவி மற்றும் செல்வராணி, தேவராஜா, இந்திராணி, ஆனந்தராஜா, இரவீந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.02.2021 வெள்ளிக்கிழமை அன்று New York NY 11040, U.S.A என்னும் இடத்தில் நடைபெற உள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு:
தயாபரன் - 447786230865
tayagalas@yahoo.com
இரவீந்திரராஜா - 077 133 1771

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அரசின்...

வித்தார் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரன்.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்துத் தூதுவர் டொமினிக், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்வடமாகாண முன்னாள்முதலமைச்சருமான விக்னேஸ்வரன் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே சுவிஸ் தூதுவரிடம் விக்னேஸ்வரன் இவ்வாறு வலியுறுத்தினார் என்று அவரால் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், கத்தோலிக்கர்கள் போன்ற அனைவரும் இன்றைய ஜனாதிபதியின் தவறான முடிவுகளால், கொள்கைகளால் பாதிப்புற்றிருக்கின்றார்கள். சிறுபான்மையினர் அனைவருக்கும் எதிராக சிங்கள பௌத்தம் என்ற ஆயுதத்தை ஓய்வுபெற்ற இராணுவத்தினருடனும் சேவையில் இருக்கும் படையணியினருடனும் சேர்ந்து பிரயோகிக்கும் போது பாதிப்புறும் சகல மக்களும் ஒன்றிணைகின்றார்கள்.

தற்போதைய ஐக்கியம் அரசாங்கத்தின் பிழையான செயற்பாடுகளால் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் சேர்வன. தமிழரும் முஸ்லீம்களும் சேர்வர். வடக்கும் கிழக்கும் இணைவன. ஆகவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலே தான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது - என்று சுவிஸ் தூதுவரிடம் தெரிவித்தேன்.

பொதுவாக்கெடுப்பை வேண்டி உங்களுடைய கட்சி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்தது. அவ்வாறெனின் என்னவாறான கேள்விகளை நீங்கள் பொது வாக்கெடுப்பின் போது மக்களிடம் கேட்கப் போகின்றீர்கள் என்று கேட்டார். முதலிலே பொது வாக்கெடுப்புக்கு ஐ.நா அனுமதியைத் தரட்டும் கேள்விகளைப் பின்னர் பார்க்கலாம் என்றேன். பல சிங்கள கல்வியியலாளர்கள் இந்தப் பொது வாக்கெடுப்பின் மூலமாக தமிழ்த் தலைவர்கள் நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்கள் என்றும் பிரிவினைக்கு வித்திடுவதற்கே பொது வாக்கெடுப்பை தமிழ் அரசியல்வாதிகள் கோருகின்றார்கள் என்று நினைக்கின்றார்கள் என்று கூறினார்.

அதற்குப் பதிலளித்த நான் ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என்று கேள்விகளை நாம் முன்வைத்தால் ஒற்றையாட்சியா பிரிவினையா என்ற கேள்விக்கு இடமில்லை அல்லவா என்று குறிப்பிட்டேன் - என்றுள்ளது. (ம)

### யாழ்.பல்கலை...

கள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் எனவும் அவர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 491 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் பயிலும் கேகாலையைச் சேர்ந்த மாணவனுக்கே தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த நிலையில் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் என்றார். இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 447 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 3 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மூவரும் பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்த நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டு இருந்தவர்கள். (ம-22)

# காணி சுவீகரிக்கும் முயற்சிகளில் கடற்படையின் கை ஓங்குகின்றது

## காரைநகர் காணி அபகரிப்புத் தொடர்பில் முன்னாள் எம்.பி. சரவணபவன் விசனம்

**கொழும்பு, பெப். 18**

**யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேசத்தில் காணி சுவீகரிக்கின்ற சம்பவங்களின் ஊடாக கடற்படையின் ஆதிக்கம் மேலோங்கிக்கொண்டு செல்கின்றது. காணி சுவீகரிப்பு விடயத்தில் கடற்படையின் ஆதிக்கம் படிப்படியாக விரிவாகின்றது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

காரைநகரில் கடற்படைக்குக் காணி சுவீகரிக்கும் நோக்கில், காணி அளவீடு செய்யும் பணியில் நிலஅளவைத் திணைக்களத்தினர் நேற்று ஈடுபட்டிருந்தனர். அதனையடுத்து அங்குள்ள மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அங்குசென்றிருந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன், மக்களுடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலஅளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்ய முயற்சிக்கும் இந்த எட்டு பரப்புக் காணியும் பாடசாலைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியின் சொந்தக்காரர்களான மூன்று பேரில் இருவர் அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளனர். குறித்த காணியை கடற்படையின் தேவைக்காகக் கையகப்படுத்தும் நோக்கில் நிலஅளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து மக்களுடன்நாமும் இணைந்து எதிர்ப்புக் காட்டினோம். இதனையடுத்து நிலஅளவைத் திணைக்களத்தினர் திரும்பிச்சென்றனர்.

இந்தக் காணியைக் கையகப்படுத்துவதில் அரசுக்குச் சட்டச்சிக்கல் இருப்பதாக அறிகிறேன். எனினும், காரைநகர் மீன் சந்தைக்கு அருகில் 3 பரப்புக் காணி கடற்படைக்குக் கொடுக்கப்படவுள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளன. அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் போன்ற பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புக் காட்டினோம். ஆனால் இங்கு, பலருடைய தனியார் காணிகள் இருக்கின்றன.

இவற்றின் உரிமையாளர்கள் தற்போது புலம்பெயர் நாடுகளில் வசித்து வருகின்றனர்.

அடுத்தடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இதுபற்றிய கோரிக்கைகளை முன்வைத்து தீர்மானங்களை நிறைவேற்றி இதற்கு நிரந்தரத்தீர்வைப்பெற முயற்சிகளை மேற்கொள்வோம். - என்று சரவணபவன் மேலும் தெரிவித்தார். (த319)

## இலங்கையில் கொரோனாவால்

# 28பேரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, பெப். 18

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 28ஆக அதிகரித்துள்ளது இந்தத் தகவலை சுகாதார சேவைப் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் வெளியிட்டார்.




இதேவேளை, கொரோனாத் தொற்றால் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும், அவற்றில் 11 ஆயிரத்து 766 படுக்கைகள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது 6 ஆயிரத்து 747 படுக்கைகளில் நோயாளர்கள் உள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அவர், எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்ள சுகாதாரக் கட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது எனவும் கூறினார்.

புதிய கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு இதுவரை கண்டறியப்பட்டுள்ளவர்கள் அனைவரும் கொரோனாத்தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எனவும் மருத்துவர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார். (ம-22)

# இலங்கையில் பா.ஜ.க. ஆட்சியா? இந்திய விக்னேஸ்வரன்களின் கதையிது

## அமைச்சர் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18

இலங்கையில் விக்னேஸ்வரனைப் போன்ற சிந்தனையில் உள்ள இந்திய மாநில முதலமைச்சர் ஒருவரே பாரதிய ஜனதா கட்சி இங்கு ஆட்சியமைக்கும் என்ற கருத்தைக் கூறியுள்ளார் என்றுபொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் ஆட்சியமைக்கும் திட்டத்தில் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

'விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபை முதலமைச்சராக இருக்கும்போது, வடக்கில் சிங்கள மக்கள் வாழ்க்கை நடத்த உரிமை இல்லை எனத் தெரிவித்திருந்தார். அவ்வாறான இந்திய முதலமைச்சர் ஒருவரே இதனையும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் கட்சியொன்றை அமைத்து, ஆட்சிப்பீடமேறுவதாக இந்திய மாநில முதலமைச்சர் ஒருவர் மாத்திரமே கூறியுள்ளார். அது இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடல்ல. இறையாண்மையுடன் உள்ள ஒரு நாட்டுக்கு அவ்வாறான எச்சரிக்கைகளை விடுக்க முடியாது. நாம் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்துக்கொண்டு செயற்படுவோம்' என்றார். (ம-22)

## சர்வதேச....

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் அரசியல் கட்சிகளுக்கிடையே மாற்றுக் கருத்துகள் இருந்தாலும், நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்படும்போது, அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். சர்வதேச ரீதியில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும். போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச பொறிமுறைக்கு ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பதில் தெளிவாக உள்ளோம். ஸ்பெயின், ருமேனியா ஆகிய நாடுகளில் தூதரகங்களை அமைப்பதற்கும் மடகஸ்காரில் தூதரக அலுவலகமொன்றை அமைப்பதற்கும், லீக்கின்ஸ்டைன் நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம-22)

## விரைவில்...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டில் உருமாற்றம் பெற்ற கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகின்றது. இதனையடுத்து பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களுக்கு தடை போடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா நடைபெறுவது புதிய கொரோனா வைரஸ் கொத்தணி உருவாகுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்று கல்வியியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட உருமாற்றம் பெற்ற கொரோனா வைரஸ் வகை தற்போது இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸ் வகை முன்னைய கொவிட் -19 வைரஸை விடவும் மிக வேகமாகத் தொற்றும் தன்மையுடையது என்று துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரஸ் வகைத் தொற்றாளர்கள் நாட்டில் தற்போது இனங்காணப்பட்டுவருகின்றனர். இந்த நிலைமை மிக ஆபத்தானது என்று தெரிவித்துள்ள பொதுச்சுகாதாரச் சங்கம், நாட்டை முடக்கத்துக்குக் கொண்டுவருவது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டியிருந்தது. நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் நாட்டின் பல இடங்களையும் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில், நாட்டின் பல பாகங்களில் இருந்துவரும் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் ஓரிடத்தில் கூடுவது பெரும் கொரோனாக் கொத்தணி தோன்ற வாய்ப்பாக அமைந்துவிடும் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, வடக்கில் தற்போது கொரோனாப் பரவல் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள்ள உள்ள நிலையில், கொரோனாத் தொற்று அபாய இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ள ஏனைய மாகாணங்களில் இருந்து வருவோரால் தொற்றுப் பரவலடையக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்று துறைசார் நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல்கலைக் கழகக் கற்றலுக்காக வெளியிடங்களில் இருந்து வரும் மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா தொடர்பான தீர்மானத்தைப் பல்கலைக் கழக நிர்வாகம் எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்த நிலையிலேயே சுகாதார அமைச்சு இது தொடர்பில் விரைவில் தன் நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வெளிமாவட்டங்களில் இருந்து பலர் வருகைதருவர் என்பதால் புதிய கொரோனாக் கொத்தணிக்கு சாத்தியம் உள்ளதால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்புத் தொடர்பாக நாம் தற்போது தீவிர கவனம் செலுத்தியுள்ளோம் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

பொதுவாக கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளின்படி எந்த நிகழ்வுகளும் 150 பேருக்கு மேல் ஒன்றுகூடுவது தடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் ஒன்று கூடுவது பிழையானது. எனவே கொரோனா தடுப்பு பொதுச்சுகாதார விதிமுறைகளின்படிதான் எந்த நிகழ்வையும் முன்னெடுக்க முடியும். அந்தவகையில் யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா தொடர்பாக நாம் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. ஏற்கனவே பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் இது தொடர்பில் ஒரு குழுவை அமைத்து நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிந்தேன். இருப்பினும் இவ்விடயம் தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டியுள்ளதால், அடுத்துவரும் நாள்களில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளேன்' என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (ம-எ26)

## திட்டமிட்ட....

திகதி களில் திட்டமிட்ட வாறு நடைபெறும் என்று துணைவேந்தர் மூத்த பேராசிரியர் சிறீ சற்குணராஜா தெரிவித்தார்.

பாடசாலைகளில் நிகழ்வுகளை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில், பட்டமளிப்பு விழா நடைபெறுமா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'பாடசாலைகள் வேறு. பல்கலைக்கழகங்கள் வேறு. நாம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி திட்டமிட்டவாறு பட்டமளிப்பு விழாவை நடத்துவோம்' என்று அவர் கூறினார். (ஓ,5)

## தற்கொலை...

ஷாரால் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா செட்டிகுளம் பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வீரபுரம், சின்னத்தம்பனை பகுதியில் உள்ள சின்னக்குளத்தை அண்டிய சிறிய காட்டுப் பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்கொலைத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் இரு தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, மேலும் அந்தப் பகுதியில் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தேடும் பணிகள் நேற்று இரவு வரை தொடர்ந்தன. (ம-110,18)

## கிணற்றில்...

பட்டார். தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த 46 வயதுடைய கந்தசாமி சிறீரஞ்சன் என்ற நபரே உயிரிழந்தவராவார்.

3 பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர் ஊரெழு மேற்குப் பகுதிக்கு வாகனம் திருத்தும் வேலைக்காகச் சென்றபோதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம குமார் மேற்கொண்டார். (ம-26)

## வெற்றிலை....

பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 12ஆம் திகதி மருமகனுடன் மரணவீட்டுக்குச் சென்றுவிட்டு மட்டுவில் வீதியால் பயணப்பட்டுக்கொண்டிருக்கையில் வெற்றிலை துப்பும்போது தானும் சேர்ந்து விழுந்துள்ளார். அவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## காரைநகரில்...

குறித்த காணித்துண்டு கடற்படையினரின் தேவைகருதி நில அளவைத்திணைக்களத்தால் அளவிடப்படவுள்ளது என்று செய்திகள் வெளியாகியதை அடுத்து காரைநகர் பிரதேச செயலகத்துக்கு முன்னால் கூடிய மக்கள் பிரதிநிதிகளும் மக்களும் வெளிப்படுத்திய எதிர்ப்பை அடுத்து குறித்த காணி அபகரிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சி தலைவருமாகிய மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் காரைநகர் பிரதேச செயலாளரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

காரைநகர் பிரதேசத்தில் இந்துக் கல்லூரிக்கு சொந்தமானது என்று கூறப்படும் நிலப் பகுதியை நில அளவையாளர்கள் கடற்படையினருக்குக் கையகப்படுத்த முயற்சி எடுத்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தினர் அளவீட்டை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதுபற்றி எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாங்களும் பிரதேச செயலாளருடன் ஆராய்ந்து கலந்துரையாடி இருக்கின்றோம். எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் காணியை அளக்கப்போகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-319,20)

## தந்தையை...

அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என் தந்தை கொலைசெய்யப்பட்ட விவகாரத்தில் தனிப்பட்ட ரீதியில் எவரின் மீதும் கோபமோ வன்மமோ எனக்கு இல்லை. தந்தையை இழந்தது கடினமான தருணம். அதில் தொடர்புடையவர்களை நான் மன்னித்துவிட்டேன். வன்முறைமூலம் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. நான் பன்மைத்துவக் கலாசாரத்தை மதிக்கின்றேன். மொழி, கலாசாரம் ஆகியவற்றை நான் மற்றவர்கள் மீது திணிக்கமாட்டேன் - என்றார். (ம)

## பழிவாங்கல்...

தலைவரான ரணில் இருவரும் ஓரணியில் இணைந்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் விதமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை அரசிடம் வலியுறுத்த முடிவு செய்யப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அத்தோடு முன்னாள் பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் அதற்கு எதிராகவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தான் குரல் கொடுப்பதற்குத் தயாராகவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார். (ம-22)

## இலங்கைக்....

வனவு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளனர் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சி தொண்டமானின் மகனைக் கொண்டு இலங்கையில் கட்சி அமைப்பதைப் பற்றிக் கூறவில்லை என்றும், அவர்கள் பிரதான கட்சியொன்றை விலைக்கு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் தோல்வியடைந்த இந்தியா, தமது கட்சியொன்றை இலங்கையில் ஆட்சிப்பீடம் ஏற்றுவதன் மூலமே இந்த நிலைமையை மாற்றியமைக்கலாம் என்று சிந்திக்க ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் ஒவ்வொரு அரசுக்கும் திட்டங்களை வழங்கி, தனிநபர்களை விலைக்கு வாங்கி, செல்வாக்குச் செலுத்தி வந்த இந்தியா, இனியும் அதனைத் தொடர முடியாதென்பதை உணர்ந்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி உட்பட அரசு கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முன்வந்த நிலையில், அரசை ஆட்சியில் அமர்த்தியவர்களின் எதிர்ப்பால் குறித்த தீர்மானம் கைவிடப்பட்டது.

இதுபோன்ற நிலைமைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் முகங்கொடுக்க நேரிடும் என்பதால், இலங்கையின் பிரதான அரசியல் கட்சியொன்றை விலைக்கு வாங்கும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளது' என்றார். (ம-22)



## ஸ்ராரை வீழ்த்தியது நோர்த் கொங்கியூரஸ்

யாழ்ப்பாணம், பெப். 18
ஜி.பி.சி.எல் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் ஸ்ரார் அணியை வீழ்த்தியது நோர்த் கொங்கியூரஸ் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் ஸ்ரார் அணியினர் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்து 18.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சயந்தன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக கபில்ராஜ் மற்றும் துவாரகலன் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோர்த் கொங்கியூரஸ் அணியினர் 1[illegible]3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர். நோர்த் கொங்கியூரஸ் அணி சார்பாக அதிகபட்சமாக சன்ஜயன் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கொக்குவில் ஸ்ரார் அணி சார்பாக மோகனதீபன் 2 இலக்குகளையும், பிரதீஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நோர்த் கொங்கியூரஸ் அணியின் சன்ஜயன் தெரிவானார். (ம-320)

# ஐ.பி.எல் ஏலம் இன்று

**சென்னை, பெப். 18**
**நடப்பு வருட ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் சென்னையில் இன்று நண்பகல் 2.30 மணிமுதல் இடம்பெறவுள்ளது. 8 அணிகளுக்கும் 61 வீரர்கள் இன்றைய ஏலத்தின் மூலமாகத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.**



2021ஆம் ஆண்டுக்கான 14ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஏலத்தில் பங்கேற்பதற்காக 8 அணிகளும் தாங்கள் தக்கவைக்கும் வீரர்கள், விடுவிக்கப்பட்ட வீரர்கள் பட்டியலைக் கடந்த மாதமே அளித்துவிட்டன. மேலும், ஏராளமான வெளிநாட்டு வீரர்களும், உள்நாட்டு வீரர்களும் ஏலத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர்.

8 அணிகளும் வீரர்களின் பட்டியலை உறுதி செய்து 292 வீரர்களே ஏலத்தில் பங்கேற்கச் சம்மதித்துள்ளன. இதில் 164 இந்திய வீரர்கள், 115 வெளிநாட்டு வீரர்கள், 3 துணை நாடுகளின் வீரர்கள் என 292 வீரர்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 3 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 9 வீரர்களையும், சிஎஸ்கே அணி ஒரு வெளிநாட்டு வீரர் உள்பட 6 வீரர்களையும், பஞ்சாப் கிங்ஸ் அணி 5 வெளிநாட்டு வீரர் உள்பட 9 வீரர்களையும், கொல்கத்தா அணி 2 வெளிநாட்டு வீரர் உள்பட 8 வீரர்களையும், ஆர்சிபி அணி 3 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 11 வீரர்களையும், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஒரு வெளிநாட்டு வீரர் உள்பட 3 வீரர்களையும், டெல்லி கேப்பிடல்ஸ் அணி 3 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 8 வீரர்களையும், மும்பை இந்தியன்ஸ் அணி 4 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 7 வீரர்களையும் ஏலத்தில் எடுக்கலாம்.

8 அணிகளும் சேர்ந்து மொத்தம் 61 வீரர்களைத் தேர்வு செய்ய உள்ளன. இதற்காக 292 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்கின்றனர். (ம)

# டெஸ்ட்டில் இருந்து பவ் டுபிளஸி ஓய்வு



ஜோகன்ஸ்பேர்க், பெப். 18
தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் தலைவரான பவ் டுபிளஸி சர்வதேச டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் டுபிளஸி தெரிவித்த தாவது:
கடந்த ஆண்டு அனைவரையுமே வாட்டி எடுத்துவிட்டது.

எதுவுமே நிலையில்லாமல் இருந்த நிலையில் எனக்குப் பல்வேறு விடயங்களில் தெளிவு கிடைத்திருக்கிறது. புதிய அத்தியாயத்தை நோக்கி நகர்வதற்கு என் மனது தெளிவாக இருக்கிறது.

என்னுடைய தேசத்துக்காக நான் ஒரு நாள், ரி20, டெஸ்ட் ஆகிய 3 பிரிவுகளிலும் விளையாடியதைப் பெருமையாகக் கருதுகிறேன். ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து நான் ஓய்வு பெறுவதற்குச் சரியான நேரம் வந்துவிட்டது.

இனிமேல் நான் ரி20 மற்றும் ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே என் கவனத்தைச் செலுத்தப் போகிறேன்- என்றார். (ம)

**வீடு வாடகைக்கு**
நல்லூர் பகுதியில் சகல வசதிகளுடனான மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 497 6996

**மணமகள் தேவை**
யாழ்ப்பாணம் 1987ஆம் ஆண்டு பிறந்த கிறிஸ்தவ மணமகனுக்கு பெற்றோர் மணமகளை தேடுகின்றனர்
077 200 2351

**வீட்டுப்பணிப்பெண் தேவை**
கோண்டாவில் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுடன் வீட்டில் தங்கியிருந்து வீட்டுப் பணிகள் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் உடன் தேவை.
076 472 5355

**கடை வாடகைக்கு தேவை**
திருநெல்வேலி சந்தைப் பகுதியில் கடை ஒன்று வாடகைக்கு தேவை
தொடர்பு: 077 725 7515

**தனி மற்றும் குழு வகுப்புக்கள்**
**பௌதிகவியல் (Physics)**
- சகல அலகுகள்
- துரித மீட்டல் பயிற்சிகள்
- கடந்த கால வினாக்கள் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 076 157 0107

**காணி விற்பனைக்கு**
செம்மணி வீதியில் நாயன் மார்கட்டு கேணியடியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். 1 பரப்பு (5 இலட்சம்) தொடர்பு:-
077 288 0152, 077 505 8561

# றோயல்ஸ் அணி இலகுவான வெற்றி




யாழ்ப்பாணம், பெப். 18
ஜி.பி.சி.எல் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜப்னா றோயல்ஸ் அணி சுழிபுரம் வைக்கின்ஸை வீழ்த்தியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சுழிபுரம் வைக்கின்ஸ் அணியினர் களத்தடுப்பைத் தீர்மானித்தனர். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா றோயல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரியலக்சன் 44 ஓட்டங்களையும், அருண்குமார் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுழிபுரம் வைக்கின்ஸ் அணி சார்பாக நிரோசன் 2 இலக்குகளையும் செந்தூரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் வைக்கின்ஸ் அணியினர் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர். அதிகபட்சமாக பிரதீஸ் 32 ஓட்டங்களையும் சிறிகுகன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜப்னா றோயல்ஸ் அணி சார்பாக சுஜன் 3 இலக்குகளையும், பிரசன்னா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஜப்னா றோயல்ஸ் அணியின் பிரியலக்சன் தெரிவானார். (ம-320)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.